தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

27.06.2013 A.M

## கரும்பில் தாளை பூத்தலைக் கட்டுப்படுத்துவது எப்படி?



கரும்பில் நுண்ணூட்டப் பற்றாக்குறையால் ஏற்படும் பயிர் வெளுப்பை (தாளை பூத்தல்) கட்டுப்படுத்துவது குறித்த வழிமுறைகளை கோபி வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறியது: நிலங்களில் நுண்ணூட்டப் பற்றாக்குறை காணப்படுகிறது. துத்தநாகம், இரும்பு, மாங்கனீஸ், தாமிரச் சத்துகளின் குறைபாடு அதிகமாக உள்ளது. இந்தச் சத்துகள் பயிர்களுக்குக் குறைவான அளவே தேவைப்பட்டாலும், பயிர் வளர்ச்சி மற்றும் மகசூலில் பங்கு வகிக்கின்றன.

இரும்புச் சத்துக் குறைபாடு: மண்ணிலுள்ள கால்சியத்தின் அளவைப் பொருத்து இரும்புச் சத்துக் குறைபாடு தென்படுகிறது. அதாவது சுண்ணாம்புச் சத்து அதிகமுள்ள மண்ணில் இரும்புச் சத்துப் பற்றாக்குறை அதிகம் உள்ளது. மண்ணில் வடிகால் அமைப்புகள் இல்லாத நிலையிலும், போதிய காற்றோட்டம் இல்லாவிட்டாலும் கூட, பயிர்களுக்கு இரும்புச் சத்து தேவையான அளவு கிடைக்காது.

கரும்பில் வெளுப்பு (தாளை பூத்தல்): கரும்பைப் பொருத்த வரை, நட்ட பயிரை விட, கட்டைப் பயிரில் இரும்புச் சத்துக் குறைபாடு அறிகுறி அதிகம் தென்படுகிறது. இலையில் நரம்புக்கு இடைப்பட்ட பகுதி பச்சையம் குறைந்து, வெளுத்துக் காணப்படும்.

தடுக்கும் முறைகள்: வழக்கமாக தாளை பூக்கும் பகுதிகளில் ஏக்கருக்கு 20 கிலோ அன்னபேதி உப்பை (இரும்பு சல்பேட்) இடலாம். இதை தொழு உரத்துடன் சேர்த்து இடுவது நல்ல பலனைத் தரும். இதே அன்னபேதி உப்பை கரும்புத் தோகைகளின் மீது கரைசலாகவும் தெளிக்கலாம்.

இதற்கு ஏக்கருக்கு அன்னபேதி உப்பு 2.25 கிலோ, நீர்த்த சுண்ணாம்பு 2.25 கிலோ ஆகியவற்றை 450 லிட்டர் தண்ணீரில் கரைத்து, நிலத்தில் ஈரம் இருக்கும்போது கைத் தெளிப்பான் மூலம் இலைகளில் நன்றாகப் படும்படி தெளிக்க வேண்டும். 15 நாள் இடைவெளியில் 2 அல்லது 3 முறை இரும்பு சல்பேட் கரைசலைத் தெளிக்கும்போது, கரும்பில் வெளுப்புத் தோன்றுவதை கட்டுப்படுத்தி, நல்ல மகசூலைப் பெறலாம் என்று தெரிவித்துள்ளார்.

## தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் விவசாயிகள் பங்கேற்கலாம்



தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் பங்கேற்று பயன்பெறலாம் என்று திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பால சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மாநில அரசும், மத்திய அரசும் இணைந்து தேசிய தோட்டக்கலை இயக்கம் என்ற திட்டத்தைச் செயல்படுத்துகிறது. இத் திட்டத்தின்கீழ் பழமரச் சாகுபடி, மலர்ச் சாகுபடி ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு மானியத் திட்டங்களை செயல்படுத்துகின்றன.

பழமரச் சாகுபடி: பல்லாண்டுப் பயிர்களான மா, எலுமிச்சை மற்றும் திசு வாழை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சாதாரண முறையில் 10 மீட்டருக்கு 10 மீட்டர் இடைவெளியில் மா நடவு செய்ய, முழு மானியத்தில் ஹெக்டேருக்கு 100 ஒட்டு மாங்கன்றுகளும், உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகிய இடுபொருள்களும், பராமரிப்பு மானியமும் வழங்கப்படும்.

மாவில் நெருக்கிநட்டு, நிறைய மகசூல் காணும் வகையில் 5 மீட்டருக்கு 5 மீட்டர் இடைவெளியில் மா நடவு செய்ய முழு மானியத்தில் ஹெக்டேருக்கு 400 ஒட்டு மாங்கன்றுகளும், உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகிய இடுபொருள்களும், பராமரிப்பு மானியமும் வழங்கப்படும்.

எலுமிச்சை நடவு: 6 மீட்டருக்கு 6 மீட்டர் இடைவெளியில் மா நடவு செய்ய முழு மானியத்தில் ஹெக்டேருக்கு 275 எலுமிச்சை கன்றுகளும், உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகிய இடுபொருள்களும், பராமரிப்பு மானியமும் வழங்கப்படும்.


2-ஆம் ஆண்டு பராமரிப்பு- இத் திட்டங்களில் முறையாக நன்முறையில் பராமரிக்கும் விவசாயிகளுக்கு 2-ஆம் ஆண்டில் கன்றுகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகிய இடுபொருள்களுடன் பராமரிப்பு மானியமும் வழங்கப்பட்டு, தொடர் பராமரிப்புக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திசு வாழை சாகுபடி: திசு வாழை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் திசு வாழை கன்றுகளை வாங்கி நட்டு சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு ரூ.31,200 மானிய உதவி வழங்கப்படவுள்ளது.

இத் திட்டங்களின்கீழ் பயன்பெற விவசாயிகள் தங்கள் நிலத்தின் கணினி பட்டா, பழமரங்கள் நடவுள்ள பரப்புக்கு தரிசு என்று குறிப்பிடப்பட்ட அடங்கல், தங்கள் முகவரி மற்றும் அடையாளத்தைக் குறிப்பிடும் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை நகல், தங்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படம், நடப்பில் உள்ள தங்கள் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதற்பக்க நகல் ஆகியவற்றை தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வழங்கி பதிவு செய்து கொள்ளலாம்.

மலர்சாகுபடி: கேந்தி (செண்டு மல்லி), கோழிக் கொண்டை போன்ற உதிரி மலர் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் சிறு, குறு விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.12 ஆயிரம் மானிய உதவி வழங்கப்படுகிறது. உரங்கள் பயிர் பாதுகாப்பு மருந்துகள் போன்ற இடுபொருள்கள் ரொக்கப் பராமரிப்பு மானியம் என்று இந்த மானிய உதவி வழங்கப்படும் என்றார் அவர்.

## சோளப் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை!



சோளப் பயிரைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் பி.ஆனந்தி மற்றும் கு.கைல்ஸ்லியோ ஜஸ்டின் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் சோளம் சுமார் 3.2 லட்சம் ஹெக்டரில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில், தென் தமிழ்நாட்டில் 1.12 லட்சம் ஹெக்டரில் சோளம் 7 மாவட்டங்களில் பயிரிடப்பட்டு வருகிறது.

தென் மாவட்டங்களில் சோளம் தானியத்திற்கும், தட்டைக்கும் தனித்தனியாக பயிர் செய்யப்படுகிறது. சோளத்தைத் தாக்கக் கூடிய பூச்சிகளுள் குருத்து ஈ, தண்டுப் புழு, கதிர்நாவாய் பூச்சி, கதிர் ஈ மற்றும் அசுவிணி ஆகியன முக்கியமானவை. இப் பூச்சிகளை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மூலம் கட்டுப்படுத்தி, நல்ல மகசூலைப் பெறலாம்.

சோள குருத்து ஈ: சோளம் மற்றும் மக்காச்சோளப் பயிரில் முதலில் வரக் கூடிய ஒரு முக்கியமான பூச்சி இதுவாகும். இப் பூச்சி ஒரு வாரம் முதல் ஒரு மாதம் வரை உள்ள பயிர்களைத் தாக்கும். இந்த ஈ இளம் பயிர்களின் நடுக்குருத்தை துளைத்துக் கொண்டு உண்பதால் இந்த பயிரின் நடுக்குருத்து வாடிச் சாய்ந்துவிடும். இந்தக் குருத்தை மெதுவாக இழுத்தால் கையோடு வந்துவிடும். சில சமயங்களில் இப் பூச்சியின் தாக்குதல் 86 சதவீதம் வரை இருக்கும்.

சோளம் தண்டுப்புழு: இப் புழு பொதுவாக ஒரு மாதப் பயிரைத் தாக்க ஆரம்பிக்கும். தாக்கப்பட்ட பயிரில் நடுக்குருத்து வாடி காணப்படும். இலைகளில் வரிசையாக துவாரங்கள் காணப்படுவது இப்புழு தாக்குதலின் அறிகுறி. இதன் தாக்குதல் அறுவடை வரையிலும்கூட காணப்படும். வளர்ந்த பயிரில் இதன் தாக்குதல் இருக்குமானால், அப் பயிர்கள் தங்கள் வீரியத்தை இழந்து, சிறிய பலமில்லாத சரியாக மணிப்பிடிக்காத கதிர்களைக் கொடுக்கும்.

சோளம் கதிர் நாவாய்ப்பூச்சி: இளம் பருவ பூச்சிகளும், வளர்ந்த பூச்சிகளும் சோளக் கதிரில் மணிகள் பால் பிடிக்கும் தருணத்தில் சாற்றை உறிஞ்சி உண்பதால், கதிர்கள் சாவியாகி விடுகிறது. இதனால் 15 முதல் 30 சதவீதம் வரை மகசூல் இழப்பு ஏற்படுகிறது. சோள மணிகளில் இப் பூச்சிகள் ஏற்படுத்திய சிறு துவாரங்களினால் சோளத்தின் தரம் குறைகிறது.

கதிர் ஈ: இந்தப் பூச்சி பொதுவாக சோளம் பயிரிடப்படுகின்ற எல்லா இடங்களிலும் காணப்படும். சோளத்தைத் தாக்கும் பூச்சிகளில் முக்கியமான ஒன்றாக இது கருதப்படுகிறது. இப் பூச்சியின் இளம் புழுக்கள் சோளப் பூக்களைச் சேதப்படுத்துவதால், சோளம் மணிப் பிடிக்காமல் சாவியாகிவிடுகிறது.

அசுவிணி: இப் பூச்சிகள் சாற்றை உறிஞ்சி உண்ணக் கூடிய தன்மை கொண்டவை. இப் பூச்சிகள் பொதுவாக சோளப் பயிரில் நடுக்குருத்தில் காணப்படும். மேலும், இலைகளின் அடிப்பாகத்தில், தண்டுப்பகுதி மற்றும் சோளக் கதிர்களிலும்கூட காணப்படும். இளம் மற்றும் வளர்ந்த பூச்சிகள் பயிரின் சாற்றை உறிஞ்சி உண்ணுவதால், இலைகள் மஞ்சளாக மாறும்.

சில நேரங்களில் இலைகளின் ஓரங்கள் கருகிக் காணப்படும். இப் பூச்சிகள் சாற்றை உறிஞ்சிக் கொண்டே தேன் போன்ற ஒரு திரவப் பொருளை கழிவாக வெளியேற்றுகின்றன. கதிரில் இப் பூச்சிகள் அதிகமாக இருந்தால், அவை அறுவடையைப் பாதிக்கும். இந்த அசுவிணி ஒரு வகையான வைரஸ் நோயை பரப்பக் கூடிய தன்மையுடையது.

சோளத்தில் ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு: ஒரே சமயத்தில் விதைத்தும் மற்றும் முன்பட்டத்தில் விதைப்பதாலும் குருத்து ஈ, தண்டுப்புழு, கதிர் ஈ மற்றும் கதிர் நாவாய்ப் பூச்சிகளின் தாக்குதலைக் குறைக்கலாம்.

குருத்து ஈயைக் கட்டுப்படுத்த ஒரு கிலோ சோள விதைக்கு 4 மிலி குளோரிபைரிபாஸ் அல்லது 4 மிலி பாசலோன் அல்லது 4 மில்லி மானோ குரோட்டோபாஸ் மருந்தையும், 0.5 சதவீதம் கோந்தையும், 20 மிலி நீரில் கரைத்து விதை நேர்த்தி செய்து, 12 மணி நேரம் நிழலில் உலர்த்திய பின் விதைக்க வேண்டும்.

நேரடி விதைப்பில் 5 கிலோ விதையைப் பயன்படுத்தி, நெருக்கி விதைத்த பின்னர், குருத்து ஈ, தண்டுப்புழு, அடித்தேமல் நோய் தாக்கிய செடிகளைக் களைத்து விடலாம்.

ஊடு பயிராக தட்டைப்பயறு அல்லது மொச்சைப் பயிரிடுவதால் தண்டுப்புழு தாக்குதலைக் குறைக்க முடியும். வயல் வரப்புகளில் உள்ள களைகளை அகற்றி அழிப்பதால், குருத்து ஈ, தண்டுப்புழு, கதிர் ஈ தாக்குதலைக் குறைக்கலாம்.

கைவினை முறைகள்: முட்டைப் புழு, கூட்டுப் புழுக்கள் பாதிக்கப்பட்ட பயிரின் பகுதிகளையும் சேகரித்து அழிப்பதால், பூச்சி நோய் தாக்குதல் அதிகரிக்காது தடுக்கப்படுகின்றன.

கருவாட்டுப் பொறி ஏக்கருக்கு 5 என்ற அளவில் வைப்பதால் குருத்து ஈக்கள் கவரப்பட்டு, அழிக்கப்படுகின்றன. ஒரு மாத காலம் இந்தப் பொறியை வைக்க வேண்டும். வாரம் ஒருமுறை நனைத்த கருவாட்டை வைத்திட வேண்டும்.

விளக்குப் பொறி வைப்பதால், தண்டுப்புழுவின் தாய்ப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். ஏக்கருக்கு 5 என்ற அளவில் இனக் கவர்ச்சி பொறிகள் வைத்து, கதிர் பருவத்தில் தாக்கிடும் பச்சைப் புழுவின் (ஹெலிகோவெர்பா) ஆண் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

ரசாயன பூச்சிக் கொல்லிகள்: பொருளாதார சேத நிலையைத் தாண்டும் பட்சத்தில் சரியான பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தெளிக்க வேண்டும்.

குருத்து ஈ: ஒரு செடிக்கு ஒரு முட்டை அல்லது 10 சதவீதம் நடுக்குருத்து காய்ந்து காணப்பட்டால் மீதைல் டெமட்டான் 200 மிலி அல்லது ரோகார் 200 மிலி இவற்றில் ஒன்றை தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

குருத்துப் பூச்சி: 10 சதவீதம் நடுக்குருத்து காய்ந்து காணப்பட்டால், குயினால்பாஸ் குருணை மருந்து ஏக்கருக்கு 6 கிலோ அல்லது போரேட் குருணை மருந்தை 3 கிலோ அல்லது பியூடான் குருணை மருந்து 7 கிலோ. இவற்றில் ஏதேனும் ஒன்றை 20 கிலோ மண்ணுடன் கலந்து, நடுக்குருத்தில் இட்டுக் கட்டுப்படுத்தலாம்.

கதிர் ஈ: கதிருக்கு 5 எண்ணமும், கதிர்நாவாய்ப் பூச்சி கதிருக்கு 10 எண்ணமும், கதிர்புழு கதிருக்கு 5 எண்ணமும் இருந்தால் ஏக்கருக்கு கார்பரில் அல்லது மாலத்தியான் அல்லது பாசலோன் தூசு மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 10 கிலோ என்ற அளவில் கதிர்களில் தூவிக் கட்டுப்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளனர்.

## சென்னையில் 103 டிகிரி வெயில்; சில இடங்களில் இன்றும் மழை பெய்யும்

தமிழககத்தில் புதன்கிழமை (ஜூன் 26) ஐந்து இடங்களில் வெயில் 100 டிகிரிக்கு மேல் சுட்டெரித்தது. அதிகபட்சமாக சென்னை மற்றும் கடலூரில் 103 டிகிரி பதிவானது.

சில இடங்களில் இன்று மழை: தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வியாழக்கிழமை (ஜூன் 27) சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும். நீலகிரி மற்றும் கோவை

மாவட்டங்களில் அதிக அளவு கனமழை பெய்யும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதன்கிழமை பதிவான வெயிலின் அளவு (ஃபாரன்ஹீட்டில்): சென்னை, கடலூர் - 103, புதுச்சேரி - 101, மதுரை, காரைக்கால், நாகப்பட்டினம்- 100, தூத்துக்குடி - 98, திருச்சி - 97, வேலூர் - 96, பாளையங்கோட்டை - 95, சேலம், கரூர் பரமத்தி - 93.

புதன்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): வால்பாறை, நீலகிரி மாவட்டம் தேவாலா, கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு - 150, வால்பாறை தாலுகா அலுவலகம் - 90,பெரியாறு அணை - 60 நீலகிரி மாவட்டம் நடுவட்டம் - 40, பொள்ளாச்சி, அறந்தாங்கி, செங்கோட்டை - 20, உதகை, குளச்சல் - 10

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 56 அடி! நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு

கேரள வனப்பகுதி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை நீர்ப்பிடிப்புப் பகுதியில் தொடர்மழை பெய்து வருவதால், பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 16 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து 56 அடியை எட்டியுள்ளது. தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், கேரள வனத்தை ஒட்டியுள்ள முக்காலி, கிங்ரூண்டி,அட்டப்பாடி, பரணி, அல்லி, முள்ளி ஆகிய இடங்களில் பெய்யும் மழைநீர் காட்டாற்று வெள்ளமாக நேரடியாக பில்லூர் நீர்த்தேக்கத்திற்கு வந்து சேர்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலை நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் தொடர்ந்து மழை பெய்து வருவதால், குந்தா, கெத்தை நீர்த்தேக்கங்களில் இருந்து வெளியேறும் உபரி நீரும் பில்லூர் அணையில் கலக்கிறது.

இவ்வாறு கேரளத்தில் இருந்துவரும் வெள்ளமும், அணைகளின் உபரி நீரும் அணையில் கலப்பதால், பில்லூர் அணை முழு கொள்ளளவான 1.5 டி.எம்.சி.யை எட்டியுள்ளது. பில்லூர் அணைக்கு விநாடிக்கு 16 ஆயிரம் கனஅடி நீர் நீர்வரத்து உள்ளதால், அதே அளவுள்ள உபரிநீரை உடனடியாக பவானி ஆற்றில் திறந்துவிடும் நடவடிக்கையில் பொதுப்பணித் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அந்த நீர் புதன்கிழமை பவானிசாகர் அணைக்கு வந்து சேர்ந்தது. புதன்கிழமை நண்பகல் 1 மணி நிலவரப்படி, அணையின் நீர்வரத்து 16,461 கனஅடியாக இருந்தது.

அதன் காரணமாக பவானிசாகர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து, மாலை 6 மணிக்கு 55.79 அடியாக உயர்ந்தது. பவானிசாகர் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சில இடங்களில் இன்றும் மழை பெய்யும்

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும். நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் அதிக அளவு கனமழை பெய்யும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதன்கிழமை பதிவான வெயிலின் அளவு (ஃபாரன்ஹீட்டில்): சென்னை, கடலூர் - 103, புதுச்சேரி - 101, மதுரை, காரைக்கால், நாகப்பட்டினம்- 100, தூத்துக்குடி - 98, திருச்சி - 97, வேலூர் - 96, பாளையங்கோட்டை - 95, சேலம், கரூர் பரமத்தி - 93.

புதன்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): வால்பாறை, நீலகிரி மாவட்டம் தேவாலா, கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு - 150, வால்பாறை தாலுகா அலுவலகம் - 90,பெரியாறு அணை - 60 நீலகிரி மாவட்டம் நடுவட்டம் - 40, பொள்ளாச்சி, அறந்தாங்கி, செங்கோட்டை - 20, உதகை, குளச்சல் - 10.

## "பண்ணைப் பசுமை' கடைகளுக்கு நீலகிரியிலிருந்து செல்லும் மலைக் காய்கறிகள்

தமிழக முதல்வர் சென்னையில் தொடங்கி வைத்துள்ள பண்ணைப் பசுமை காய்கறிக் கடைகளுக்கு நீலகிரி மாவட்டத்திலிருந்து நேரடியாக மலைக் காய்கறிகள் அனுப்பப்படுகின்றன. காய்கறி விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக, விவசாயிகளையும் நுகர்வோரையும் நேரடியாக இணைக்கக் கூடிய 31 "பண்ணைப் பசுமை' நுகர்வோர் கடைகளை சென்னையில் தமிழக முதல்வர் திறந்து வைத்துள்ளார். இக்கடைகளுக்கு, நீலகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் உருளைக் கிழங்கு, காரட், பீட்ரூட், பீன்ஸ், முட்டைக்கோஸ், நூல்கோல் ஆகியவற்றை விவசாயிகளின் தோட்டங்களிலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து, சென்னைக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்படும் காய்கறிகளுக்கான தொகையும் உடனுக்குடன் விவசாயிகளின் பண்ணைகளிலேயே பட்டுவாடா செய்யப்படுகிறது. இப்பணிகள் நீலகிரி மாவட்ட ஆட்சியரின்

நேரடி மேற்பார்வையில் செயல்படுத்தப்படுகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் மலைக் காய்கறிகள் அதிக அளவில் விளையக்கூடிய பகுதிகளான கொதுமுடி, குளிச்சோலை, எம்.பாலடா, இத்தலார், தொரைஹட்டி, இடுஹட்டி, கூக்கல்தொரை, கக்குச்சி, தும்மனட்டி, எமரால்டு, நெடுகுளா போன்ற இடங்களிலிருந்து நேரடியாக காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு, சென்னைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதுதொடர்பான கலந்தாய்வுக் கூட்டம், உதகையில் மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் கூட்டுறவுத் துறை கூடுதல் பதிவாளர் கே.பிரமிளா, மண்டல இணை பதிவாளர் ஆர்.வனிதா, நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்க செயலாட்சியர் ஆர்.கேசவன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் மீராபாய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் பண்ணைப் பசுமை திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்த நீலகிரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இத்திட்டத்தால் நீலகிரி மாவட்ட விவசாயிகள் இடைத்தரகர்களின் தலையீடு இல்லாமலும், போக்குவரத்துச் செலவினம் ஏதுமில்லாமலும், தங்களது தோட்டங்களி லேயே காய்கறிகளை நல்ல விலைக்கு விற்க முடிகிறது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## நீலகிரியில் பருவமழை தொடர்கிறது



நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை வலுத்து வருகிறது. மாவட்டத்தில் கடந்த 5 நாள்களாகப் பெய்துவரும் மழையால் 15-க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தென்மேற்கு பருவமழை பரவலாகப் பெய்து வருவதுடன், தொடர்ந்து வலுத்தும் வருகிறது. கேரள எல்லையை ஒட்டியுள்ள கூடலூர், பந்தலூர் பகுதிகளில் அதிக அளவிலும், உதகை வட்டாரப் பகுதிகளில் சற்றுக் குறைவாகவும் மழை பெய்து வருகிறது.

தொடர்மழை காரணமாக மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடுமையான குளிர் நிலவுகிறது; உதகையின் பல்வேறு பகுதிகளில் மின்தடை ஏற்பட்டுள்ளதுடன், குடிநீர் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது.

நஞ்சநாடு, கீழ் கோழிக்கூடு, மந்தாடா புது லைன், வாசுகி நகர், தட்டக்கொல்லி, நாரங்கால், பள்ளிப்பட்டி, தேவாலா, பிதர்க்காடு, ஸ்கூல்மட்டம் ஆகிய பகுதிகளில் 15-க்கும் மேற்பட்ட வீடுகள் மழையால் இடிந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு மாவட்ட நிர்வாகத்தால் உடனடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்மழை காரணமாக மாவட்டத்தில் கூடலூர், பந்தலூர் பகுதிகளுக்கு செவ்வாய்க்கிழமை விடுமுறை அளிக்கப்பட்டது. புதன்கிழமையும் அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டது.

மாவட்டத்தில் புதன்கிழமை காலை வரை 624 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. அதிகபட்சமாக தேவாலாவில் 148 மி.மீ மழையும், அப்பர் பவானியில் 132 மி.மீ. மழையும், அவலாஞ்சியில் 119 மி.மீ. மழையும் பதிவாகின.

கூடலூரில் தொடர் மழை: கூடலூர், பந்தலூர் பகுதிகளில் பெய்துவரும் தொடர் கன மழை காரணமாக, இரண்டாவது மைல், தட்டக்கொல்லி பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மூன்று வீடுகள் குடியிருக்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளன.

தொடர்ந்து இப்பகுதியில் கனமழை பெய்து வருவதால், செம்பாலா, ஈட்டிமூலை சாலையிலுள்ள குடியிருப்புப் பகுதியில் பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதில் சுமார் இருபது வீடுகள் நிலச்சரிவு அபாயத்தில் சிக்கியுள்ளன.

பாண்டியாறு புன்னம்புழா, முதல் மைல் ஆறு, பந்தலூர் பகுதியில் பொன்னாணி ஆறு உள்பட அனைத்து சிற்றாறுகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அபாயம் நீடிக்கிறது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்
27.06.2013 A.M

**சின்ன வெங்காயம் விலை குறைந்தது**



சேலம்:கர்நாடக மாநிலம், மைசூரிலிருந்து வெங்காயம் அதிகளவு விற்பனைக்கு வருவதால், சின்ன வெங்காயத் தின் விலை குறைந்து வருகிறது.

கடந்த, 40 நாட்களாக, ஒரு கிலோ, சின்ன வெங்காயம், 80 முதல் 90 ரூபாய் வரை விற்கப்பட்டது. இந்நிலையில், கடந்த மூன்று நாட்களாக, இது, 45 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மைசூரிலிருந்து, சின்ன வெங்காயம் வரத்து அதிகரித்து உள்ளதால், தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும், சின்ன வெங்காயத்தின் விலை குறையத் துவங்கி உள்ளது.

சேலம் லீபஜார் மார்க்கெட் வெங்காய வியாபாரி ராஜேஷ் கூறியதாவது:சேலம், லீபஜார் மார்க்கெட்டில், 10க்கும் மேற்பட்ட வெங்காய மண்டிகள் உள்ளன. தினமும், 4,000 மூட்டைகளுக்கு மேல், சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் வரத்தாகிறது. இதையடுத்து, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும், சின்ன வெங்காயத்தை விலை குறைத்து, விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 10 நாட்களுக்கு முன், ஒரு கிலோ, 90 ரூபாய் வரை விற்ற

சின்ன வெங்காயம், படிப்படியாக குறைந்து இப்போது, 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

மைசூர் சின்ன வெங்காயம் ஒரு கிலோ, 35 ரூபாய்க்கு கிடைக்கிறது. பெரிய வெங்காயம் ஒரு கிலோ, 18 முதல் 22 ரூபாய் வரை, விற்பனை செய்யப்படுகிறது. மைசூர் வெங்காயம் வரத்து அதிகமானால், தமிழகத்தில் சின்ன வெங்காயம் விலை, மேலும் குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**காய்ந்து போன ராஜாங்குளம், கிணறுகள் வற்றத் துவங்கின**

திண்டிவனம்:திண்டிவனத்தில் உள்ள ராஜாங்குளம் காய்ந்து போனதால் கிணறுகள் காயத்தொடங்கியது.திண்டிவனம் நகரின் மைய பகுதியில் ராஜாங்குளம் மற்றும் தீர்த்தகுளம் உள்ளன. இதில் தீர்த்தகுளம் ஆக்கிரமிப்புகள் மற்றும் கழிவு நீர் தொட்டியாக மாறிவிட்டது.நகரின் பெரிய குளமான ராஜாங்குளம் நகரின் நீர் ஆதாரங்களில் ஒன்றாக உள்ளது. இந்த குளத்தில் தற்போது சிறிதளவு குட்டை அளவு மட்டுமே தண்ணீர் உள்ளது. நீர் வற்றி குளம் காய்ந்ததால் பாறைகள் வெளியே தெரிகிறது. இதனால், சுற்று வட்டாரங்களில் உள்ள வீட்டு கிணறுகளும் காயத் துவங்கின. தண்ணீர் சரிவர கிடைக்காமல் மக்கள் பெரிதும் அவதியடைகின்றனர். குளம் முற்றிலும் காய்ந்ததால் மழை பெய்து தண்ணீர் வருவதற்குள், சமூக நல அமைப்புகள், மாணவ மாணவிகளை கொண்டு குளத்தை தூய்மைபடுத்த முயற்சி எடுக்க வேண்டும்.

**விவசாயத்திற்கு தேவையானஉர மூட்டைகள் ரயிலில் வந்தது**

விக்கிரவாண்டி:விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்ட விவசாய பயன்பாட்டிற்கு ரயில் மூலம் 1327 டன் உரம் வந்து சேர்ந்தது.விழுப்புரம் மாவட்டத்தில் ஆடிப்பட்டம் இரு வாரங்களில் துவங்க உள்ளது. விவசாயத்திற்கு தேவை யான பாக்டம்பாஸ் உரம் இந்திய அரசு நிறுவனத்திலிருந்து கேரளா மாநிலம் கொச்சினிலிருந்து ரயில் மூலம் அனுப்பினர். சரக்கு ரயிலில் 21 பெட்டிகளில் ஏற்றப்பட்டு 1327 டன் உரம் முண்டியம்பாக்கம் ரயில் நிலையத்திற்கு நேற்று காலை 11 மணிக்கு வந்தது.உரங்களை கம்பெனி உதவி மேலாளர் சுப்பிரமணி தலைமையில் லாரியில் ஏற்றி விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு சுமை தூக்கும் தொழிலாளர்கள் அனுப்பினர்.

**இடப்பற்றாக்குறையில் செயல்படும் தோட்டக்கலை துறை அலுவலகம்**

கெங்கவல்லி: கெங்கவல்லி யூனியன் அலுவலக வளாகத்தில், சிமென்ட் குடோனில் செயல்படும் தோட்டக்கலைத்துறை அலுவலகத்துக்கு, தனி கட்டிட வசதி ஏற்படுத்தி தரவேண்டும் என, கோரிக்கை எழுந்துள்ளது.
கெங்கவல்லி யூனியன் அலுவலக வளாகத்தில் உள்ள தோட்டக்கலை துறை அலுவலகத்தில்,

ஒருங்கிணைந்த தோட்டக்கலைத்துறை அபிவிருத்தி திட்டத்தில் காய்கறி விதை நேர்த்தி செய்து, இலவசமாகவும் மானிய விலையிலும் வழங்குகின்றனர். பல்வேறு மரக்கன்றுகளும் வளர்த்து, விற்பனை செய்கின்றனர். மேலும், சொட்டு நீர் பாசனம் இலவசமாகவும், மானியத்திலும் அமைத்து தரப்படுகிறது. சொட்டுநீர் பாசன விவசாயிகளுக்கு, நீரில் கரையும் உரங்கள் இருப்பு வைத்தும் வழங்குகின்றனர்.

இந்நிலையில், தோட்டக்கலைத்துறை அலுவலகம், யூனியன் அலுவலக வளாகத்தில் உள்ள சிமென்ட் குடோனில், இடப்பற்றாக்குறையில் செயல்பட்டு வருவதால், ஆவணங்கள் பரிமாரிக்க முடியாத நிலையும், மரச்செடிகள், விதை நேர்த்திகள் மற்றும் உர மூட்டைகளை அடுக்கி வைக்க இடம் இல்லாத நிலையும், விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, சிமென்ட் குடோனில் செயல்படும், தோட்டக் கலைத்துறை அலுவலகத்துக்கு, தனி இடம் ஒதுக்கி, தனி அலுவலக கட்டிடம் கட்ட வேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வடமாநில வெல்லம் வரத்து அதிகரிப்பு உருண்டை வெல்லம் விலை வீழ்ச்சி**

சேலம்: தமிழகத்தில், வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உத்திரபிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில் இருந்து, உருண்டை வெல்லம் வரத்து அதிகரித்ததை அடுத்து, தமிழகத்தில் வெல்லம் விலை, கிலோவுக்கு, 10 ரூபாய் வரை சரிந்துள்ளது.

தமிழகத்தில் வெல்லம் உற்பத்தி அதிக அளவில் நடக்கும், ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி, சித்தோடு, நாமக்கல் மாவட்டம் பிலிக்கல்பாளையம், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் வறட்சியின் தாக்கம் காரணமாக, கரும்பு சாகுபடியில் பாதிப்பு ஏற்பட்டது. வெல்லம் உற்பத்தியில் கடும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

மார்ச் முதல் வாரம் உருண்டை வெல்லம் கிலோ, 42 ரூபாய்க்கு விற்றது, மூன்று மாதத்தில், 24 ரூபாய் வரை அதிகரித்து. கிலோ, 66 ரூபாய்க்கு விற்பனையானது.

உருண்டை வெல்லத்தின் விலை உயர்வை அடுத்து, அச்சுவெல்லம் விலையும் உயர்ந்தது. மார்ச் முதல் வாரத்தில், அச்சுவெல்லம் கிலோ, 50 ரூபாய்க்கு விற்றது, மூன்று மாதத்தில் கிலோவுக்கு, 30 ரூபாய் அதிகரித்து, கிலோ, 80 ரூபாய்க்கு விற்கிறது.

இந்நிலையில், உத்திரபிரதேசம், குஜராத், மஹாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் வெல்லம் உற்பத்தி அதிகரித்ததன் எதிரொலியாக, அந்த மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் வெல்லம் வரத்தில் உயர்ந்துள்ளது.

கடந்த மாதம் வரை, மாதத்துக்கு, ஐந்து லாரிகளில் மட்டும் விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த

வெல்லம், தற்போது, 25 லாரிகளாக உயர்ந்துள்ளது. வடமாநில வெல்லம் வரத்து காரணமாக, தமிழகத்தில், ஈரோடு, நாமக்கல், சேலம் வெல்லச் சந்தைகளில் வெல்லம் விலை திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கிலோ, 66 ரூபாய்க்கு விற்ற உருண்டை வெல்லத்தின் விலை, 10 ரூபாய் சரிவு ஏற்பட்டு, நேற்று கிலோ, 56 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. உருண்டை வெல்லத்தின் விலை சரிவு ஏற்பட்டுள்ள நிலையில், அச்சுவெல்லம் கிலோவுக்கு, ஐந்து ரூபாய் குறைந்து, நேற்று கிலோ, 75 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

வெல்லம் விலையில் ஏற்பட்டுள்ள இந்த சரிவு தமிழக வெல்ல உற்பத்தியாளர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

**சின்ன வெங்காயம் விலை குறைந்தது**

சேலம்: கர்நாடக மாநிலம், மைசூரிலிருந்து வெங்காயம் அதிகளவு விற்பனைக்கு வருவதால், சின்ன வெங்காயத்தின் விலை குறைந்து வருகிறது.

கடந்த, 40 நாட்களாக சின்ன வெங்காயம், ஒரு கிலோ, 80 முதல், 90 ரூபாய் வரை, விற்கப்பட்டது. பின், படிப்படியாக குறைந்து, 60 முதல், 70 ரூபாய் வரை, விற்பனையாகிறது. மூன்று நாட்களாக, சின்ன வெங்காயம், கிலோ, 45 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மைசூரிலிருந்து, சின்ன வெங்காயம் விற்பனைக்கு கொண்டு வருவது அதிகரித்துள்ளதால், தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயம் விலை குறையத்துவங்கி உள்ளது.

சேலம் லீபஜார் மார்க்கெட் வெங்காய வியாபாரி ராஜேஸ் கூறியதாவது:

சேலம், லீபஜார் மார்க்கெட்டில் பத்துக்கும் மேற்பட்ட வெங்காய மண்டிகள் உள்ளன. தினமும், 4,000 மூட்டைகளுக்கு மேல் சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் வரத்தாகிறது. இங்கிருந்து ஆத்தூர், கள்ளக்குறிச்சி, சங்ககிரி உள்பட பல இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஈரோடு மாவட்டம், காலிங்கராயன் பகுதி, நாமக்கல் மாவட்டம், ராசிபுரம், தருமபுரி மாவட்டம் பொம்முடி, பாப்பிரெட்டிபட்டி, சேலம் மாவட்டம், வாழப்பாடி ஆகிய பகுதிகளில் இருந்து, சின்ன வெங்காயம் அதிகளவு இங்கு வரத்தாகிறது. மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து, பெரிய வெங்காயம் வரத்தாகிறது. ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் வெங்காயம் வரத்து அதிகம் காணப்படும்.

கடந்த, ஒரு மாதத்துக்கும் மேலாக, சின்ன வெங்காயத்துக்கு, அதிக விலை கிடைத்து வந்தது. தற்போது, சின்ன வெங்காயம் விலை குறைந்துள்ளது. இதற்கு காரணம், கர்நாடக மாநிலம் மைசூர், சாம்ராஜ்நகர் பகுதியில் இருந்து, நீர்ச்சத்து நிறைந்த சின்ன வெங்காயம், அதிகளவில் மூட்டை மூட்டையாக விற்பனைக்கு வருகிறது.

மைசூரில் இருந்து வரத்தாகியுள்ள சின்ன வெங்காயத்தை நீண்ட நாள் வைத்திருக்க முடியாது. இதையடுத்து, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயத்தை விலை குறைத்து விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பத்து நாட்களுக்கு முன், ஒரு கிலோ, 90 ரூபாய் வரை, விற்ற சின்ன வெங்காயம் படிப்படியாக குறைந்து இப்போது, 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மைசூர் சின்ன வெங்காயம் ஒரு கிலோ, 35 ரூபாய்க்கு கிடைக்கிறது. பெரிய வெங்காயம் ஒரு கிலோ, 18 முதல், 22 ரூபாய் வரை, விற்பனை செய்யப்படுகிறது. மைசூர் வெங்காயம் வரத்து அதிகமானால், தமிழக சின்ன வெங்காயம் விலை இன்னும் குறைய வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம்**

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் வரதராஜூ, சொட்டு நீர் பாசனம் அமைப்பது குறித்து வெளியிட்ட அறிக்கை:ராசிபுரம் வட்டாரத்தில், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க, 100 சதவீதம் மானியத்துடன் சொட்டுநீர் பாசன கருவிகள், பெரிய விவசாயிகளுக்கு, 75 சதவீத மானியத்துடன் கருவிகள் வழங்கப்பட உள்ளது.ராசிபுரம் வட்டாரத்தில் கரும்பு, துவரை, தென்னை ஆகியவற்றுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, சொட்டு நீர் பாசனம் அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் வி.ஏ.ஓ., மற்றும் தாசில்தார் சான்றுடன், பட்டா, சிட்டா அடங்கல் மற்றும் நில வரைபடம் ஆகியவற்றுடன் வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மானிய விலையில் சேதமான தானியங்கள் கோழிப்பண்ணையாளர் நலசங்கம் கோரிக்கை**

நாமக்கல்: "இந்திய உணவு கழக குடோனில் சேதமடைந்த கோதுமை, அரிசி போன்ற உணவு தானியங்களை, கோழிப்பண்ணையாளர்களுக்கு மானிய விலையில் வழங்க, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் நலச்சங்க தலைவர் நல்லதம்பி கூறியுள்ளார்.
இதுகுறித்து அவர் கூறியதாவது:
கடந்த ஆண்டு, நாடு முழுவதும் நிலவிய கடும் வறட்சி காரணமாக, கோழித்தீவன மூலப்பொருள் விலை கடும் ஏற்றம் கண்டது. அதன்படி, கோழித்தீவனத்தில் முக்கிய இடம் பிடிக்கும் சோயா கடந்த சில மாதத்தில் டன் ஒன்றுக்கு, 18 ஆயிரம் ரூபாயில் இருந்து, 42 ஆயிரம் ரூபாய் வரை விலை ஏற்றம் கண்டுள்ளது.
அதுபோல், சன்பிளவர் புண்ணாக்கு ஒரு டன், 13 ஆயிரம் ரூபாயிலிருந்து, 24 ஆயிரம்

ரூபாயாகவும், தவிடு, 7,000 ரூபாயிலிருந்து, 15 ஆயிரம் ரூபாயாகவும், கருவாடு மற்றும் கருவாட்டு தூள், 18 ஆயிரம் ரூபாயிலிருந்து, 35 ஆயிரம் ரூபாய், 100 கிலோ எடை கொண்ட மக்காச்சோளம், 1,000 ரூபாயிலிருந்து, 1,600 ரூபாய் வீதம் விலை ஏற்றம் கண்டுள்ளது. இந்த விலையேற்றதால், முட்டை உற்பத்தி செலவு கூடியுள்ளது. அதே வேளையில், முட்டை விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்படுகிறது. இப்பிரச்னை காரணமாக, ஒரு லட்சம் கோழி உள்ள பண்ணைகளுக்கு, கடந்த சில மாதத்தில் மட்டும், 20 லட்சம் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கு தீர்வு காண, சோயா இறக்குமதி அதிகரிக்க வேண்டும். மேலும், இந்திய உணவு கழக குடோனில் சேதமடைந்த கோதுமை, அரிசி போன்ற உணவு தானியப் பொருளை கோழிப்பண்ணையாளர்களுக்கு மானிய விலையில் வழங்க, மத்திய அரசு நடவடிக்கை வேண்டும். வங்கிக் கடனுக்கு வட்டியை, ஆறு சதவீதம் வரை குறைக்க வேண்டும். இதுதொடர்பாக, மத்திய அமைச்சர் சிதம்பரத்தை மே மாதம் நேரில் சந்தித்து மனு அளிக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**வெற்றிலை விலை பெரும் சரிவு: விவசாயிகள் சோகம்**

ப.வேலூர்: ப.வேலூரில், வெற்றிலை விலை பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரத்தை விட, இந்த வாரம் வெற்றிலை விலை பாதியாக சரிந்துள்ளதால், விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டம், ப.வேலூர் மற்றும் சுற்றுவட்டாரங்களான பாண்டமங்கலம், பொத்தனூர், பொய்யேரி, நன்செய் இடையாறு ஆகிய கிராமங்களில், 3,000 ஏக்கருக்கும் மேல் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வெள்ளை மற்றும் கற்பூர ரக வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது.

சாகுபடி செய்யப்படும் வெற்றிலை, ப.வேலூர், நான்கு ரோட்டில் உள்ள மண்டிகளுக்கு கொண்டுவரப்படும். பின், அங்கிருந்து சேலம், கரூர், ஈரோடு மற்றும் மதுரை மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. தவிர, மும்பைக்கு நாள்தோறும் கற்பூர ரக வெற்றிலை விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்நிலையில், கடந்த வாரத்தைக் விட, இந்த வாரம் வெற்றிலை விலையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. அதன்படி, 104 கவுலி கொண்ட ஒரு சுமை வெள்ளை வெற்றிலை, கடந்த வாரம், 4,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, பாதியாக விலை சரிந்து, 2,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. 2,000 ரூபாய்க்கு விற்பனையாகி வந்த கற்பூரக வெற்றிலை, 800 ரூபாயாக சரிந்துள்ளது.

இது ப.வேலூர் பகுதி வெற்றிலை விவசாயிகள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து வெற்றிலை விவசாயிகள் சிலர் கூறியதாவது: ப.வேலூர் சுற்று வட்டாரத்தில், வறட்சி காரணமாக வெற்றிலை சாகுபடி பரப்பளவு வெகுவாக குறைந்துள்ளது. அதனால், தொழிலாளர்கள் பலர் வேலைவாய்ப்பு இழந்துள்ளனர். போதிய தண்ணீர் இல்லாததால் உற்பத்தியாகும் வெற்றிலையும் சுருங்கி காணப்படுகிறது. அதனால், வெளிமாவட்ட, மாநில வியாபாரிகள் வெற்றிலை வாங்க முன்வரவில்லை. உள்ளூர் விற்பனை மட்டும் நடக்கிறது. அதன் காரணமாக வெற்றிலை விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது, என்றனர்.

**மழை வேண்டி சிறப்பு ஹோமம்**

தர்மபுரி: மழை வேண்டி கோவில்களில் சிறப்பு ஹோமங்கள் நடந்தது. தமிழக அரசின் உத்தரவுப்படி, ஹிந்து அறநிலையத்துறை சார்பாக நேற்று காலை, 9.30 மணிக்கு , தர்மபுரி கோட்டை மல்லிகர்ஜுனேஸ்வரர் கோவில் மற்றும் அதியமான்கோட்டை காலபைரவர் கோவிலில், வருணசூக்தா ஹோமம், காயத்திரி ஹோமம் நடந்தது. கோட்டை கோவிலில் அர்ச்சகர் முத்துகுமாரலிங்கம், அதியமான்கோட்டை காலபைரவர் கோவிலில் அர்ச்சகர் கிருபாகரன் ஆகியோர் ஹோமத்தை நடத்தினர். தொடர்ந்து மழைவேண்டி மேகவர்ஷினி, ஆனந்த பைரவி, ரூபகல்யாணி உள்ளிட்ட ராகங்கள் இசைக்கப்பட்டன. கோட்டை கோவிலில் உள்ள நத்தி சிலையை சுற்றி தொட்டி அமைக்கப்பட்டு, காசி தீர்த்தத்தை நிரப்பி, மழை வேண்டி சிறப்பு பூஜைகள் நடந்தது. செயல் அலுவலர்கள் அமுதசுரபி, சரவணன் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

**இருண்ட வானிலை: ஏமாற்றும் மழை**

தர்மபுரி: தர்மபுரியில் இருண்ட வானிலை இருந்த போதும், மழை தொடர்ந்து ஏமாற்றி வருவதால், விவசாயிகள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை அடிப்படையாக கொண்டு விவசாய பணிகள் நடந்து வருகிறது. இந்தாண்டு மே இறுதியில் வெப்ப சலனம் காரணமாக மழை பெய்தது. இந்த மழையை தொடர்ந்து விவசாயிகள் தங்கள் நிலங்களை வைகாசி பட்டத்துக்கு தயார் செய்தனர். ஆனால், எதிர்பார்த்தபடி தென்மேற்கு பருவமழை பெய்ய வில்லை. இதனால், விவசாய பணிகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக மழைக்கான அறிகுறிகளுடன் வானிலை இருந்த போதும், மழை ஏமாற்றி வருகிறது. நேற்று முன்தினம் மாலை பலத்த காற்றுடன் மழை பெய்ய துவங்கியது. ஆனால், தொடர்ந்து காற்று மட்டும் வீசியதால், சாரல் மழை மட்டுமே பெய்தது.

நேற்று காலையில் இருந்து வெயில் இல்லை. மதியத்துக்கு மேல் மழை அறிகுறியுடன் இருண்ட நிலை இருந்தது. ஆனால், மழை பெய்யவில்லை. தொடர்ந்து ஏமாற்றி வரும் மழையால் விவசாயிகள் பெரும் கலக்கத்தில் உள்ளனர்.

**விதை நெல் உற்பத்தி குறைவால் ஒரு கிலோ ரூ.50க்கு விற்க ஏற்பாடு**

கோபிசெட்டிபாளையம்: கோபி, வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் சார்பில், 200 டன் விதை நெல் (100 ஏக்கரில்) ஆர்டர் கொடுத்ததில், 30 டன் கிடைத்துள்ளதால், விதை நெல் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், ஒரு கிலோ விதை நெல், 50 ரூபாய்க்கு விற்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தின் மிகப்பெரிய அணையாக உள்ள பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சென்ற இரண்டு ஆண்டுகளாக வீழ்ச்சியாக காணப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 25 அடி வரை குறைந்ததால், குடிநீர் தேவைக்கு கூட திறக்க முடியாத நிலை ஏற்பட்டது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் சென்ற ஆண்டு, முதல் போகத்தில் மட்டும் தண்ணீர் திறக்கப்பட்டது. முதல் போக நெல் அறுவடை பணி முடிந்த கையோடு, அடுத்த போகத்துக்கான பணி மும்முரமாக நடக்கும். பருவ மழை இன்றி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் இரண்டாம் போகத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

தற்போது அணைக்கு நீர் வரத்துவங்கி, 53 அடியை தாண்டியுள்ளது. அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதை தொடர்ந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் ஒரு பக்கமும், எல்.பி.பி., பாசன விவசாயிகள் ஒரு பக்கமும் தண்ணீர் திறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஈரோடு மாவட்ட பாசனப்பகுதிக்கு, கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தில் இருந்து விதை நெல் வினியோகம் செய்யப்படுகிறது. நடப்பாண்டுக்கு விதை நெல் தேவையை பூர்த்தி செய்ய, மேட்டூர் பகுதியில், 100 ஏக்கரில் விதை நெல் தயார் செய்யப்பட்டன. தண்ணீர் தட்டுப்பாட்டால் விதை நெல் பதராக மாறியதால், 30 டன் விதை நெல் மட்டுமே கிடைத்துள்ளது. விதை நெல் பற்றாகுறை காரணமாக ஒரு கிலோ, 50 ரூபாய்க்கு விற்க திட்டமிடப்பட்டுள்ளது. கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்க அதிகாரி ஒருவர் கூறியதாவது: நடப்பாண்டு பருவ விதை நெல்லுக்கு, மேட்டூர் பகுதியில், 100 ஏக்கரில் ஏ.டி.டி., 45 ரக விதை நெல் ஆர்டர் கொடுக்கப்பட்டது.

நெல் பாசனம் மூலம் நெல் நடவு செய்தால், மூனரை ஏக்கருக்கு, 46 பொதி கிடைக்கும். போர்வெல் பாசனத்தில் நடவு செய்ததால், 15 முதல், 20 பொதி நெல் விளைச்சலாகி இருக்கும். தண்ணீர் பற்றாக்குறை காரணமாக பதராகி விட்டது.

கோபி வேளாண்மை விற்பனை மற்றும் உற்பத்தி சங்கத்துக்கு, 100 ஏக்கரில், 200 டன் விதை நெல் கேட்டிருந்த நிலையில், 30 டன் விதை நெல் மட்டுமே தரமான விதையாக கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு ஏ.டி.டி., 45 ரக விதை நெல், ஒரு கிலோ, 23 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சங்கத்தின் கொள்முதல் விலை ஒரு கிலோ, 35 ரூபாய் கொடுத்து வாங்குகிறது. தரம் பிரிப்பு உள்ளிட்ட செலவு தனியாக உள்ளது. நடப்பாண்டு விதை நெல் ஒரு கிலோ, 50 ரூபாய்க்கு விற்க திட்டமிடப்பட்டுள்ளது. சங்கத்தில் விதை நெல் குறைவாக உள்ளதால், தாராபுரம் சங்கத்தை நம்பி உள்ளோம், என்றார்.

**கால்நடை மருத்துவ முகாம்**

அந்தியூர்: அந்தியூர் அருகே பட்லூர் பஞ்சாயத்து அலுவலகத்தில், மாவட்ட நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமை சார்பில், இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை, சினை ஆய்வு, மலடு நீக்கம், ஆண்மை நீக்கம், குடற்புழு நீக்கம் மற்றும் புற ஒட்டுண்ணிகள் நீக்கம் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டன.பட்லூர், மாத்தூர், வெள்ளித்திருப்பூர், பூனாட்சி, ஒலகடம் ஆகிய ஊர்களில் இருந்து, 100க்கும் மேற்பட்ட கால்நடைகள் சிகிச்சை பெற்றன. உதவி கால்நடை மருத்துவர்கள் ரவிச்சந்திரன், பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிகிச்சையளித்தனர். நீர்வடி பகுதி மேம்பாட்டு விவசாய அலுவலர் பாலகிருஷ்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகளின் சிறப்பு கூட்டம்**

குன்னூர்: அகில இந்திய தேயிலை சிறு விவசாயிகள் கூட்டமைப்பு மற்றும் தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகள் சங்கத்தின் சிறப்பு கூட்டம் குன்னூரில் நடந்தது.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: இந்தியாவில் உள்ள 2 லட்சம் தேயிலை சிறு விவசாயிகள் சுமார் 4 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை சாகுபடி செய்து வருகின்றனர். இவர்களுக்காக, தேயிலை வாரியம் மூலம், ஒவ்வொரு கிராமத்திலும் சிறு விவசாயிகள் சங்கங்கள் அமைப்பது; இதில், நடப்பாண்டில் 400 சங்கங்கள் அமைப்பது; தேயிலை மறு நடவு சிறப்பு திட்டம், தேயிலை கவாத்து சிறப்பு திட்டத்தை உடனடியாக செயல்படுத்துவது;தேயிலை தொழிற் சாலைகள் அமைக்க உதவி செய்வது; தேயிலை விவசாயிகள், தனியார் எஸ்டேட்கள் பயன்பெறும் வகையில், மத்திய அரசால், 1.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில், தென்னிந்திய தேயிலை உற்பத்தி மாவட்டங்களுக்கு, ஒதுக்கப்பட்ட 50 லட்சம் ரூபாயை முறையாக பயன்படுத்துவது என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதன் பின், கூட்டத்துக்கு தலைமை வகித்த, அகில இந்திய தேயிலை சிறு விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் சமீர் ராய் கூறியதாவது: 12வது ஐந்தாண்டு திட்டத்தில் தேயிலை சிறு விவசாயிகள் மேம்பாட்டுக்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வறட்சி காலங்களில் தேயிலைக்கு சொட்டு நீர்பாசனம், நீர்பாசனம் போன்றவற்றை, சிறு விவசாயிகள் மற்றும் சிறு விவசாயிகள் சங்கங்கள் பயன் பெறுவதற்காக 40 சதவீத மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

இதற்காக தேயிலை வாரிய உறுப்பினர் எம்.பி., விஸ்வநாதன், மத்திய நிதியமைச்சர் சிதம்பரம், மத்திய அரசு மற்றும் தேயிலை வாரியத்துக்கு நன்றி தெரிவிக்கிறோம். பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய கோரி ஐகோர்ட் தேயிலை வாரியத்துக்கு உத்தரவிட்டது. இதன் பேரில், மாவட்ட அளவில் கலெக்டரின் தலைமையில் கீழ் கண்காணிப்பு குழு அமைப்பது; தேயிலை தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் தூள் ஏல மையங்களின் மூலம் விற்பது; 65:35 என்ற விகித்ததில் சரியான முறையில் நடைமுறைக்கு கொண்டு வருவது ஆகிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சமீர் ராய் கூறினார். கூட்டத்தில், தேயிலை வாரிய துணை தலைவர் கோஷி பேபி, தென்னிந்திய தேயிலை விவசாயிகள் சங்க துணை தலைவர் டாக்டர் ராமு மற்றும் சிறு விவசாயிகள் பங்கேற்றனர்.

**வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் மாநில அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம்**

பெரம்பலூர்: பருத்தி உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரித்தல் தொடர்பான மாநில அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தலைமையில் வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் நடந்தது. கருத்தரங்கில் கலெக்டர் தரேஷ்அகமது பேசியதாவது: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு பருத்தி, மக்காச்சோளம் முக்கிய பயிர்களாகும். தற்போது ஒரு ஹெக்டேர் பரப்பளவில் 55 ஆயிரம் வரை வருவாய் கிடைக்கின்றது. அதை மாற்றி ஒரு ஹெக்டேர் பரப்பளவில் ஒரு லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்க செய்வதுதான் விவசாயிகளுக்கு, விவசாயத்தின் மீது ஆர்வத்தை தூண்ட வழிவகுக்கும். இந்த ஒரு லட்ச ரூபாய் வருவாயில் 15 சதவீத வருவாய் ஊடுபயிர்கள், வரப்போரத்தில் நடப்படும் பயிர்களின் மூலம் பெற தகுந்த பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கமும், அதற்கான ஆலோசனைகளும் இந்த கருத்தரங்கில் அளிக்கப்படும். அமெரிக்கா, சீனா உள்ளிட்ட வெளிநாடுகளில் ஒரு ஹெக்டேருக்கு அதிக பட்சமாக 10.5 டன் வரை உற்பத்தி செய்யப்படுகின்றது. பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோள உற்பத்தியானது ஒரு ஹெக்டேருக்கு 7.50 டன்னாக அதிகரிக்க செய்ய தகுந்த விவசாய உத்திகளும், இயந்திர கருவிகளையும் பயன்படுத்தப்பட செயல்விளக்கங்கள் வேளாண்மைத்துறை மற்றும் ரோவர் வேளாண் அறிவியல் மையம் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது.

இதற்காக பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோள சாகுபடி செய்ய ஒரு கிராமத்திற்கு ஐந்து ஹெக்டேர் வீதம் மாதிரி பண்ணை அமைத்து மாவட்டத்தில் மொத்தம் 750 ஹெக்டேரில் மாதிரி பண்ணைகள் அமைத்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்படும். பருத்தி உற்பத்தியை அதிகரிக்க கிராமத்திற்கு இரண்டு ஹெக்டேர் வீதம் மொத்தம் 350 ஹெக்டேரில் மாதிரி பண்ணைகள் அமைக்கப்பட்டு செயல்விளக்கம் அளிக்கப்பட உள்ளது. இதில், 70 ஹெக்டேரில் மிக நீண்ட இழை பருத்தி சாகுபடி குறித்தும், 280 ஹெக்டேரில் நீண்ட இழை சாகுபடி குறித்தும் மாதிரி பண்ணைகள் அமைக்கப்படும். விவசாயிகளின் நிலத்தில் மண் பரிசோதனை செய்யப்பட்டு அதற்கேற்ப உரம் பயன்படுத்த ஆலோசனைகள் வழங்கப்படும். மழைத்தூவான் (ரெயின் கன்), நீர்த்தெளிப்பான் (ஸ்பிரிங்களர்) கொண்டு சிக்கனமுறையில் நீர் பாசனம் செய்ய அரசு மானியத்தில் கருவிகள் வழங்கப்படவும் உள்ளது.

இவற்றை பயன்படுத்தி விவசாயிகள் குறைந்த செலவிலும், குறைந்த பரப்பளவிலும் அதிக மகசூல் எடுத்து லாபமடைய வேண்டும். கருத்தரங்கில் விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடியில் உள்ள தொழில்நுட்பங்கள், விளைந்த பருத்தியை இயந்திரம் மூலம் பறித்தல் குறித்த செயல்விளக்கம் குறித்து விளக்கப்பட்டது. இவ்வாறு அவர் பேசினார். கருத்தரங்கில் மாவட்ட பஞ்சாயத்து தலைவர் சகுந்தலா, துணை தலைவர் சேகர், யூனியன் குழு தலைவர்கள் ஜெயலட்சுமி, வெண்ணிலா, கிருஷ்ணகுமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, வேளாண்மை துணை இயக்குநர் ஆல்பிரட் உள்பட வேளாண்மை அலுவலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி**

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை நகராட்சியில், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில், பட்டுக்கோட்டை எம்.எல்.ஏ., ரெங்கராஜன் கொடியசைத்து துவக்கி வைத்தார். நகராட்சி தலைவர் ஜவகர்பாபு தலைமை வகித்தார். துணைத்தலைவர் பாரதி, கவுன்சிலர்கள் செல்ல நாகராஜன், மோகன் உள்ளிட்டோர் மக்களிடம் துண்டு பிரசுரம் வழங்கினர். நகராட்சி தலைவர் ஜவஹர்பாபு கூறியதாவது: மழை நீரை சேகரித்தால் குடிநீர் பற்றாக்குறையை தவிர்க்கலாம். நீர்வளத்தை அதிகரிக்கலாம். நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் தடுக்கலாம். நீரின் தரம் கெடாமல் பாதுகாக்கலாம். இப்பகுதியில், கடல் நீர், குடிநீருடன் கலப்பதை தவிர்க்கலாம். வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தலாம், களிமண் பகுதியில் அமைந்துள்ள கட்டிடங்களில் விரிசல் ஏற்படுவதை தடுக்க

முடியும்.

மழைக்காலம் தொடங்குவதற்கு முன், மொட்டை மாடியில் உள்ள குப்பைகளை அகற்றி சுத்தப்படுத்த வேண்டும், மழைநீர் சேகரிக்கும் இடத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மழைநீர் தொட்டிகளை புனரமைக்கவும், புதுப்பிக்கவும், புதிய கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பை அமைக்கவும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மற்றும் நகராட்சி அதிகாரிகள் இலவசமாக ஆலோசனை வழங்கி வருகின்றனர். இதை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

**வறட்சி நிவாரணம் வழங்குவதில் தாமதம்**

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணமாக ரூ. 60 கோடி ஒதுக்கப்பட்டதில், இதுவரை ரூ. 35 கோடி வரை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வறட்சிநிவாரணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

பருவமழை பொய்த்ததால் மாவட்டத்தில் பயிரிடப்பட்ட பயிர்கள் அனைத்தும் அறுவடைசெய்வதற்கு முன்பே காய்ந்தன. அரசு ரூ.60 கோடியை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க மாவட்டத்திற்கு ஒதுக்கியது.

இதற்கென தொகைகள் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பப்பட்டு விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டது.

இந்நிலையில் விவசாயிகள் பலர், வறட்சியால் பாதிக்கப்பட்டும் சிட்டா அடங்களில் விளைவித்த பயிர்கள் குறித்து பதிவு செய்யாததால் வறட்சி நிவாரணம் பெறமுடியாத நிலை ஏற்பட்டது. இவர்களுக்கு ஆறுதல் கூறும் வகையில், விடுபட்டவர்களிடம் மனுக்களை மாவட்ட நிர்வாகம் பெற்றுக்கொண்டது. இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமா என உறுதிகூறவில்லை. இந்நிலையில் இதுவரை மாவட்டத்தில் ரூ.35 கோடி வரை அரசு வழங்கிய நிவாரண தொகை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையை விரைந்து வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**விவசாயிகள் மானியம் பெற அழைப்பு**

தேனி:நீர்வள, நிலவள திட்டத்தில் மானிய உதவிகள் பெற விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்.

தேனி, போடி ஊராட்சி ஒன்றியங்களில் தேனியாறு உபவடிநில பகுதிகளில் தமிழ்நாடு விவசாய பல்கலை., விவசாய ஆராய்ச்சி மையம் சார்பில் நீர்வள, நிலவள திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி, தோட்டக்கால் நிலங்களில் பயறுவகை பயிர்கள் உற்பத்தி,

நெல், பயறு வகை விதை உற்பத்தி, கரும்பு மற்றும் வாழையில் துல்லிய பண்ணையம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களில் தேர்வு செய்யப்படும் விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்துகள், இடு பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துல்லியப்பண்ணை திட்டத்தில் சொட்டுநீர் பாசன அமைப்பிற்கு மானியம், நீரில் கரையக்கூடிய உரங்கள், பூச்சி மருந்துகள், திசு வாழைக் கன்றுகள் மானியமாக வழங்கப்படுகிறது. விஞ்ஞானிகளால் விவசாயிகளுக்கு வயல்விழா, நிலையப்பயிற்சி, வயல்வெளி பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பாக விவசாயம் செய்யும் விவசாயிகளின் தோட்டங்களுக்கு அழைத்துச் சென்று காண்பிக்கப்படுகிறது. பயன்பெற விரும்பும் போடி, தேனி ஒன்றிய விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள விவசாய அதிகாரிகளை அணுகலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப பயிற்சி**

கம்பம்:பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் குழு ஒன்று, கம்பம் பகுதியில் விவசாயிகளுக்கு நவீன சாகுபடி தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்கினர். பெரியகுளம் தோட்டக்கலை மாணவிகள் கிருத்திகா, பொன்சுகன்யா, மகேஸ்வரி, நந்தினி நட்சத்திரா, நித்தியா, பமீலா, பொன்னுசெல்வி ஆகியோர் "கிராம தங்கல் திட்டத்தின்' கீழ் காமயகவுண்டன் பட்டி கிராமத்தில் தங்கி விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப பயிற்சி வழங்கினர்.உத்தமபுரத்தில், போதுமாயஜ் என்பவர் தோட்டத்தில் கத்தரி பயிருக்கான, நவீன தொழில்நுட்பங்களை விளக்கி கூறினர். அனுமந்தன்பட்டியில் விவசாயி சுரேந்திரன் தோட்டத்தில், கொட்டை முந்திரி சாகுபடியில், கவாத்து எடுத்தபின் உயிர் உரக்கலவை கரைசலை மரத்தின் வேர்களுக்கு செலுத்தும் முறையை விளக்கி கூறினார்கள். அய்யாவு என்பவரின் திராட்சை தோட்டத்தில் சாம்பல் நோய்க்கு ரசாயன மருந்துகளை பயன்படுத்தாமல், இயந்திர முறையில் கட்டுப்படுத்தும் முறையை விளக்கி கூறினார்கள். மாணவிகளுடன் தோட்டக்கலை அலுவலர் மனோகரன், உதவி அலுவலர்கள் வேல் முருகன், பழனிவேல் ராஜன் ஆகியோரும் பங்கேற்றனர்.

**உழவர் பாதுகாப்பு திட்ட ஓய்வூதியம்**

தேனி: எய்ட்ஸ் நோயால் இறந்தவர்களின், 18 வயதுக்கு உட்பட்ட ஆதரவற்ற குழுந்தைகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. முதல் அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக பதிவு செய்து, அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும்.

உறுப்பினராக பதிவு செய்தவர்களில், கணவர் அல்லது மனைவி ஒருவர் மட்டுமோ அல்லது இருவருமே நோயால் இறந்து விட்டால், அவர்களின் குழந்தைகள் ஓய்வூதியம் பெற தகுதியானவர்கள்.
அங்கீகாரம் பெற்ற அரசு டாக்டரின் மருத்துவச் சான்று, உழவர் அடையாள அட்டை ஆகியவற்றுடன் தொடர்புடைய தாசில்தார் அலுவலகத்தில், சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தாரிடம் மனு செய்து பயன் பெறலாம்,என கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

**தொடர் மழை: திராட்சை விவசாயிகள் கலக்கம்**

கம்பம்:தொடர் மலையால், கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி செய்யப்பட்டுள்ள திராட்சை பழங்கள், வெடித்து சேதமாகிறது. விலையும் சரிந்து வருவதால், திராட்சை விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.
கேரளாவில் நீடித்து வரும் தென்மேற்கு பருவமழையால், கடந்த 20 நாட்களாக, கம்பம் பள்ளத்தாக்கில், மழை பெய்து வருகிறது. இதனால், மற்ற விவசாயிகள் மகிழ்ச்சியில் இருந்தாலும், கம்பம் பள்ளத்தாக்கில் ஓடைப்பட்டி, வெள்ளையம்மாள் புரம், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, கூடலூார், கம்பம், குள்ளப்ப கவுண்டன்பட்டி, கருநாக்க முத்தன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் திராட்சை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.
மழை மற்றும் மேக மூட்டமாக இருக்கும் போதும், காற்றின் ஈரப்பதம் அதிகரிக்கும் போதும், திராட்சை பயிரில்"சாம்பல் மற்றும் செவட்டை' நோய் தாக்கி, மகசூலை பாதிக்கும். தற்போது, 20 நாட்களாக பெய்து வரும் சாரல்மழையால், திராட்சை பழங்கள் வெடித்து சிதறுகின்றன. திராட்சை விவசாயிகள் சங்க நிர்வாகி இருளாண்டி கூறுகையில்,""தொடர் சாரல், திராட்சையில் வெடிப்புகளை ஏற்படுத்தி, மகசூலை பாதித்துள்ளது.மேலும்,கேரளாவில் தொடர்ந்து மழை பெய்து வருவதால்,கொள்முதல் விலை கிலோவிற்கு 20 ரூபாய்க்கும் குறைவாக உள்ளது. இது திராட்சை விவசாயிகளை கடுமையாக பாதித்துள்ளது,'' என்றார்.

**விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம்**

வத்திராயிருப்பு:வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு,வங்கிகள் மூலமாக,நிவாரணம் நிதி வழங்கப்பட்டு வருகிறது. நத்தம்பட்டி, மூவரைவென்றான், துலுக்கபட்டி, அய்யனார்புரம், கட்டயத்தேவன்பட்டி, சீலநாயக்கன்பட்டி உள்ளிட்ட பகுதி விவசாயிகளுக்கு,நத்தம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலமாக, 16 லட்சம் வழங்கப்பட்டது. சங்க

தலைவர் முத்தையா, துணைத்தலைவர் ஆறுமுகம் வழங்கினர். நெல், மக்காச்சோளம் பயிரிட்டு, வறட்சியால் மகசூலை இழந்த 492 விவசாயிகள், தாங்கள் இழப்பீட்டு அளவுக்கு ஏற்ப, நிவாரணத்தொகையை பெற்றுக்கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.06.2013 A.M**

---

## கர்நாடக அணைகளில் தண்ணீர் திறப்பு

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 3000 கனஅடியாக அதிகரிப்பு



மேட்டூர் கபினி அணையில் இருந்து காவிரியில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நேற்று மாலை விநாடிக்கு 3000 கனஅடியாக அதிகரித்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த 2 வாரத்திற்கும் மேலாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால், கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கபினி அணை நிரம்பி உள்ளது. கிருஷ்ணராஜசாகர் அணையும் நிரம்பும் தருவாயில் உள்ளது.

இந்த அணைகளுக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வருவதால், பாதுகாப்பு கருதி கடந்த இரு தினங்களாக உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதையடுத்து மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் மாலை முதல் நுங்கும், நுரையுமாக செந்நிறத்தில் தண்ணீர் பாய்ந்து வந்தது. நேற்று முன்தினம் மாலை விநாடிக்கு 80 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 1,110 கனஅடியாகவும், மாலையில் விநாடிக்கு 3000 கனஅடியாகவும் அதிகரித்தது. அதேநேரம் ஒகேனக்கல்லில் 6000 கனஅடி தண்ணீர் வந்தது. சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து விநாடிக்கு 900 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. வரத்தை விட திறப்பு குறைவாக இருப்பதால், அணை நீர்மட்டம் உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் காலை 15.51 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 15.66 அடியாக அதிகரித்தது. நீர் இருப்பு 2.93 டிஎம்சி. கடந்த ஆண்டு போதிய பருவமழை பெய்யாததால், நீர்வரத்து குறைந்து மேட்டூர் அணை நீர்த்தேக்க பகுதி வறண்டு காணப்பட்டது. அணையின் நீர்மட்டமும் 15 அடியாக குறைந்த நிலையில், குடிநீருக்கே பற்றாக்குறை ஏற்படும் நிலை உருவானது. தற்போது நீர்வரத்து அதிகரித்து வருவதால், விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

நீர்வரத்து இதேபோல் நீடித்தால், ஜுலை இறுதிக்குள் டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கும் வாய்ப்பு உள்ளது. குறுவை பாதித்தாலும், சம்பா சாகுபடிக்காவது தண்ணீர் கிடைக்கும். அறுவடை தீவிரம் மேட்டூர் பகுதியில் காவிரி ஆறு வறண்ட போது அதன் கரையில் எள், சோளம், கம்பு, ராகி, நிலக்கடலை ஆகிய பயிர்களை விவசாயிகள் பயிரிட்டிருந்தனர். தற்போது 2ம் போக சாகுபடிக்கு மீண்டும் பயிரிட்டிருந்த நேரத்தில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.மேட்டூர் அணையில் நீர்மட்டம் அதிகரிக்கும் போது, பயிர்கள் நீரில் மூழ்கி விடும் என்பதால், அவற்றை அறுவடை செய்யும் பணியை விவசாயிகள் தொடங்கி உள்ளனர். ஆற்றில் நீரின்வேகம் அதிகமிருந்ததாலும், வலை சேதமாகும் என்பதாலும் மீனவர்கள் மீன்பிடிக்க முடியாமல் ஏமாற்றம் அடைந்தனர்.

**வேளாண் இயக்குனர் அறிவுரை விவசாயிகள் மண்ணுக்கு தகுந்த பயிர்களை நடவுசெய்ய வேண்டும்**

மரக்காணம், : மரக்காணம் மற்றும் சுற்றுப்புற பகுதி விவசாயிகளுக்கு பண்ணைப்பயிர் மேலாண்மை மற்றும் வேளாண் மானிய திட்டங் கள் குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது. அரிதாஸ் எம்எல்ஏ தலைமை தாங்கி னார். துணை சேர்மன் பாண்டுரங்கன் முன்னிலை வகித் தார்.

வேளாண் அலுவலர் எத்திராஜ் வரவேற்றார். இதில் உதவி வேளாண்மை இயக்குனர் கென்னடி ஜெயக்குமார் பேசியதாவது:

இப்போது நிலவளமும், நீர்வளமும் குறைந்து கொண்டே வருகிறது. கடந்த 10 ஆண்டுக்கு முன் 41 லட்சம் விவசாயிகள் தங்களது நிலத்தில் பயிர் செய்தனர். ஆனால் இன்று 21 லட்சம் விவசாயிகள் மட்டுமே சாகு படி செய்கின்றனர். விவசாய தொழில்நுட்பத்தை அதிகரிக்க ஒவ்வொரு விவசாயியும் தங்களது நிலத்தின் மண்மாதிரியை ஆய்வு செய்து அந்த மண்ணுக்கு தகுந்த பயிர் களை நடவு செய்ய வேண்டும். நிலத்தடிநீரை உறிஞ்சுவதால் நிலத் தடி நீர்மட்டம் வெகுவாக குறைகிறது. இதேநிலை நீடித்தால் அடுத்த சில ஆண்டில் தண்ணீர் பற்றாக்குறை அபாய நிலை ஏற்படும். இதனால் விவசாயி கள் அனைவரும் சொட்டுநீர் பாசன முறையை பயன்படுத்த வேண்டும். சொட்டு நீர் விவசாயம் செய்தால் மின்சாரமும் அதிகளவில் மிச்சமாகும். விவசாயிகள் அனைவரும் நமது பாரம்பரிய உணவு முறைகளான கம்பு, இளநீர், கேழ்வரகு, சோளம், சாமை, தினை, வரகு போன்ற பயிர்களை நடவு செய்ய வேண்டும். இந்த வகை உணவுகள் மனிதர்களுக்கு மிகவும் சிறந்தது. விவசாயிகள் வரும் காலத்தில் 2 மடங்கு உற்பத்தி 3 மடங்கு லாபம் என்ற விவசாய புரட் சியை உருவாக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

**பால் உற்பத்தியை பெருக்க திட்டம் பால் கூட்டுறவு சங்க நிர்வாகிகள் ஊத்தங்கரையில் கலந்தாய்வு**

ஊத்தங்கரை, : தர்மபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் சார்பில் ஊத்தங்கரை மற்றும் மத்தூர் பகுதி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கான கலந்தாய்வு கூட்டம் ஊத்தங்கரையில் நடைபெற்றது.

தர்மபுரி மாவட்ட ஆவின் ஒன்றிய தலைவர் டி.கே.ராஜேந்திரன் தலைமை வகித்தார். ஊத்தங்கரை தொகுதி எம்.எல்.ஏ., மனோரஞ்சிதம் நாகராஜ் முன்னிலை வகித்தார். பால் வள ஒன்றிய துணை தலைவர் தென்னரசு, ஆவின் பொதுமேலாளர் கொம்பையன், துணை பதிவாளர் முனிராஜ், மாவட்ட அண்ணா தொழிற்சங்க தலைவர் நாகராஜன், ஊத்தங்கரை சேர்மென் கிருஷ்ணன், துணை சேர்மென் சுப்ரமணி, நிலவள வங்கி தலைவர் சாகுல் அமீது, போச்சம்பள்ளி மார்கெட்டிங் சொசைட்டி தலைவர் தூயமணி, மாவட்ட கவுன்சிலர்கள் திருஞானம், கண்ணன், கூட்டுறவு சங்க தலைவர்கள் வேங்கன், சிவானந்தம், சேகர், சண்முகம், சேட்டுகுமார், டாக்டர் நாகராஜ் உள்ளிட்ட பலரும் பேசினர்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மானியம் வழங்க வேண்டும். உபகரணங்கள், கணினிகள் வழங்க வேண்டும். வாரா வாரம் பணம் பட்டுவாடா, புதிய கட்டட வசதிகள் போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து கூட்டத்தில் பேசப்பட்டது. நிகழ்ச்சியில் பேசிய ராஜேந்திரன்,

''தற்போது நாளொன்றுக்கு ஒன்றரை லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் 80 ஆயிரம் லிட்டர் சென்னைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பால் கொள்முதல் அதிகரிக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும். பால் உற்பத்தியை பெருக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்,'' என்றார். கெங்கபெராம்பட்டி பால் சங்க தலைவர் நாராயணசாமி வரவேற்றார். பால் உற்பத்தியாளர் சங்க செயலாளர் சண்முகம் நன்றி கூறினார்.

**அமராவதி அணை நீர் மட்டம் உயர்வு**

உடுமலை,: உடுமலை அருகே உள்ள அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனம் பெறுகின்றன. புதிய ஆய க்கட்டு பகுதிகளுக்கு பிரத £ன கால்வாயிலும், பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு ஆற்று வழியாகவும் மற்றும் கல்லாபுரம், ராம குளம் வாய்க்கால் களிலும் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படுகிறது.

இதுதவிர, நூற்றுக் கணக்கான கிரா மங்களின் குடி நீர் தேவைக்காகவும் ஆற்றில் தண்ணீர் திறக்கப்படுகிறது. கடந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் அமராவதி அணை வற ண்டது. இதனால், விவசாய பணிகள் முற் றிலும் பாதிக்கப்பட்டது. குடிநீர் பிரச்னையும் தலை தூக்கி யது.நேற்று முன்தினம் நிலவரப்படி அமராவதி அணையின் நீர்மட்டம் 32 அடியாக இருந்தது.

இந்நிலையில் கேரளா மற்றும் வால்பாறையில் பெய்த கனமழை கார ணமாக பாம் பாறு, சின்னாற்றின் வழி யாக அம ராவதி அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது.நேற்று முன்தினம் காலை நிலவரப்படி அ¬ ணக்கு வினாடிக்கு 2261 கன அடி தண்ணீர் வந்தது. இதனால் ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 3 அடி அதிகரித்து 35.92 அடியாக உயர்ந்தது. அ¬ தத்தொடர்ந்து அமராவதி அணையில் இருந்து ஆற்றின் வழியாக கொமரலிங்கம், கண்ணாடிப்புத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு வரை உள்ள பழைய ஆயக்கட்டு பாசனமாகிய 5 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு,தென்னை பயிர்களுக்காகநேற்று முன்தினம் காலை அணை யில் இருந்து ஆற்றில் வினாடிக்கு ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில், அணை யின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான கேரள மாநிலம் மறையூர் மற்றும் அதைச்சுற்றியுள்ள தலைய £று,வ £ழவுவாரை எஸ்« டட்,கு ண்டுமலை எஸ்டேட், சட்டமூணாறு ஆகிய பகுதிகளில் தொடர் கனமழை பெய்து வருகிறது. இந்த தண்ணீர் கோவில்கடவு என்ற இடத்தில் ஒன்று சேர்ந்து பாம்பாற்றில் கலந்து அமராவதி அ¬ ணக்கு வருகிறது. 3 ஆண்டுகளுக்குபிறகு இப்போதுதான் கோவில்கடவு பகுதியில் இந்த வெள்ளப்பெருக்கு

ஏற்பட்டுள்ளது. மூணாறு செல்லும் சுற்றுலா பயணிகள் இந்த அருவியில் தண்ணீர் கொட்டுவதை பார்த்து ரசித்தவாறு செல்கின்றனர்.

இந்த மழை வெள்ளத்தால் அமராவதி அணையின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. இதனால், நேற்று ஒரே நாளில் 7 அடி உயர்ந்து நேற்று நீர்மட்டம் 43.08 அடியானது. நேற்று அ¬ ணக்கு வினாடிக்கு 4170 கன அடி நீர்வரத்து இருந் தது. மழை நீடிக்கும் பட்சத்தில் 90 அடி நீர்மட்டம் கொண்ட அணை விரை வில் நிரம்பி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மேற்கு தொடர்ச்சி மலையில் கனமழை நொய்யல் ஆற்றில் வெள்ளம் விவசாயிகள் மகிழ்ச்சி**

தொண்டாமுத்தூர், : மேற்கு தொடர்ச்சி மலையில் கனமழை பெய்து வருவதால் நொய்யல் ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சுற்றுலா பயணிகள் தவிக்கின்றனர்.

மேற்கு தொடர்ச்சி மலையில் கடந்த 3 மாதங்களாக கடும் வறட்சி நிலவியது. இதன்காரணமாக நொய்யல் ஆறு வறண்டது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்தது. சுற்றுலா தலமான கோவை குற்றாலம் இழுத்து மூடப்பட்டது. ஆனால், கடந்த ஒரு வாரமாக மேற்கு தொடர்ச்சி மலையில் கனமழை பெய்து வருகிறது. இதனால், நொய்யல் ஆற்றின் துணை ஆறுகளான பெரியாறு, சாடியாறு, கல்கொத்தியாறு, நண்டங்கரையாறு ஆகியவற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. நண்டங்கரை மற்றும் புதிதாக கட்டப்பட்ட சின்னாறு தடுப்பணைகள் நிரம்பிவழிகிறது.

இதனால் நொய்யல் ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. கல்கொத்தி மலையில் திடீர் அருவிகள் உருவாகி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. நொய்யல் ஆற்றின் முதல் அணைக்கட்டான சித்தரைச்சாவடியில் இருந்து வாய்க்கால் மூலம் கோவை குளங்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு முழுவதும் தொடர்ந்து பெய்த மழையால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கோயம்புத்தூர் அணைக்கட்டு பகுதியில், ஆற்றில் சாகுபடி செய்யப்பட்ட குதிரை மசால் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின. நேற்று காலை 11.45 மணிக்கு நொய்யல் ஆற்று தண்ணீர், பேரூர் திதி செய்யும் பகுதியை அடைந்தது. பேரூர் ஆற்றங்கரை புரோகிதர்கள் மலர் தூவி நொய்யலை வரவேற்றனர். திதி செய்ய வந்த பக்தர்கள் குளித்தும், தண்ணீரை தலையில் தெளித்தும் மகிழ்ச்சி அடைந்தனர். சிறுவர்கள் ஆற்று தண்ணீரில் துள்ளிக்குதித்து விளையாடினர். நீண்ட காலத்துக்கு பிறகு, ஆற்றின் கரையில், உள்ளூர் பெண்கள் துணிகளை துவைத்தனர். வெள்ளப்பெருக்கால் கோவை குற்றால அருவிக்கு செல்ல வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். இதனால், நேற்று கோவை குற்றாலத்துக்கு சுற்றுலா வந்த பயணிகள்

ஏமாற்றத்துடன் திரும்பினர். வெள்ளப்பெருக்கு குறைந்தால் மட்டுமே சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்படுவார்கள் என வனத்துறை அதிகாரிகள் கூறினர். நொய்யல் ஆற்றில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடுவதால் கரையோரம் உள்ள ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளில் நீர்மட்டம் கிடு, கிடுவென உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மத்திய, மாநில அரசுகள் வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும்**

மேட்டுப்பாளையம், : வறட்சி நிவாரணத் தொகையாக மத்திய அரசும் மாநில அரசும் ஏக்கருக்கு தலா ரூ.5 ஆயிரம் வீதம் வழங்க வேண்டும் என்ற தமிழக விவசாயிகள் சங்க தலைவர் டாக்டர் சிவசாமி வலியுறுத்தி உள்ளார்.
தமிழ்க விவசாயிகள் சங்கத் தலைவர் டாக்டர் எம்.ஆர்.சிவசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: கடந்த சில மாதங்களாக தமிழகத்தில் காய்கறிகள் விலை உச்சகட்டத்தை அடைந்துள்ளது. அரிசி மற்றும் பருப்பு வகைகள் விலையும் தொடர்ந்து உயர்ந்துள்ளது. வறட்சி காலத்தில் குறைந்த அளவு தண்ணீரை பயன்படுத்தி குறுகிய கால பயிரான காய்கறிகளை உற்பத்தி செய்வது தான் தமிழ்நாட்டு விவசாயிகளின் வழக்கம். ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு தொழிலாளர்கள் முழுவதும் சென்று விட்டதால் கூலி ஆள் கிடைக்காததால் தற்போது காய்கறி உற்பத்தி நடைபெறவில்லை. இது தான் காய்கறி விலை உயர்வுக்கு முக்கிய காரணம். 130 நாள் வேலை திட்டத்தை விவசாயத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் மழை பெய்து வறட்சி நீங்கினாலும் காய்கறிகள் மற்றும் அத்தியாவசிய பண்டங்களின் விலை குறையாது.

வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வறட்சி நிவாரணம் சரியான முறையில் சென்றடையவில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் மத்திய அரசு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரமும் மாநில அரசு ரூ.5 ஆயிரமும் நிவாரணமாக வழங்க வேண்டும். விவசாய மின்கட்டணம் ஹார்ஸ்பவருக்கு ரூ.1750 ல் இருந்து ரூ.2500 ஆக ஒழுங்கு முறை ஆணையம் உயர்த்தி உள்ளதை கண்டிக்கிறேன்.
இந்த ஆண்டு கிருஷ்ணகிரியில் ஜூலை 5ல் உழவர் தினபேரணி நடத்துகிறோம். 130 நாள் வேலை திட்டத்தை விவசாயத்துக்கு மட்டும் பயன்படுத்துதல், வறட்சி நிவாரணம், இலவச மின்சாரம் நீடிப்பு, காட்டு பன்றி ஒழிப்பு, நீலம்பூர் பைபாஸ் சாலைக்கு பதில் மாற்றுப்பாதையில் பைபாஸ் ஆகிய 5 கோரிக்கைகள் வலியுறுத்தப்படும். இதற்கான தமிழகம் தழுவிய போராட்டம் அறிவிக்கப்படும். இவ்வாறு டாக்டர் எம்.ஆர்.சிவசாமி தெரிவித்துள்ளார்.

**மக்காச்சோளம் விலை வீழ்ச்சி எதிரொலி பருத்தி சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள் சாகுபடி பரப்பும் அதிகரிப்பு**

பழநி, : மக்காச்சோளம் விலை வீழ்ச்சி எதிரொலியாக, பருத்தி பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பழநி பகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு 50 சதவீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளது.

பழநி பகுதியில் 80க்கும் மேற்பட்ட விவசாய கிராமங்கள் உள்ளன. இப்பகுதியில் அணைகள், கண்மாய்கள் மூலம் விவசாயம் நடக்கிறது. பழநியில் கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளில் உள்ள கணக்கன்பட்டி, கோம்பைப்பட்டி, சத்திரப்பட்டி, போதுப்பட்டி, தேவத்தூர், மஞ்சநாயக்கன்பட்டி, காளிபட்டி ஆகிய கிராமங்கள் கரிசல்நில பகுதிகளாகும். இப்பகுதியில் போதிய நீர்ப்பாசன வசதிகள் இல்லாததால், பெரும்பாலான விவசாய நிலங்கள் மானாவாரியாகவும், கிணற்று பாசனத்தை நம்பியும் உள்ளன. இப்பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக மக்காச்சோளம் அதிகளவில் பயிரிடப்பட்டு வந்தது. ஆனால் தற்போது மக்காச்சோளத்திற்கு போதிய விலை கிடைக்கவில்லை. கிலோ ரூ.25க்கு மட்டுமே விற்கப்படுகிறது.

இதனால் விவசாயிகள் பருத்தி விவசாயத்திற்கு மாறிவருகின்றனர். தற்போது பருத்திக்கு அதிக விலை கிடைப்பதும் இதற்கு முக்கிய காரணம். இப்பகுதியில் பருத்தி சாகுபடி செய்யப்படும் பரப்பளவும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் 100 ஹெக்டேருக்கு குறைவாக இருந்த பருத்தி சாகுபடி பரப்பு, கடந்த ஆண்டு 50 சதவீதத்திற்கு மேல் உயர்ந்து 183 ஹெக்டேரைத் தாண்டியுள்ளது.

இதுகுறித்து கணக்கன்பட்டியைச் சேர்ந்த விவசாயி தங்கமுத்து கூறியதாவது: ஒரு குவிண்டால் 2 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையான பருத்தி, தற்போது சுமார் ரூ.3 ஆயிரத்து 700 முதல் ரூ.4 ஆயிரம் வரை விற்பனையாகிறது. பருத்தி 150 நாள் பயிர். உரமிடுதல் மற்றும் பராமரித்தல் எளிதாக உள்ளது. நீர் தேவையும் குறைவு. மக்காச்சோளத்திற்கு போதிய விலை கிடைக்காததால், எங்களை போன்ற மானாவாரி விவாசாயிகள் பருத்தி சாகுபடிக்கு மாறி வருகின்றனர். தமிழக அரசு பருத்தி விவசாயத்தை அதிகரிக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**நெற்பயிர் சாகுபடி போட்டி முதலிடம் பெற்ற விவசாயிக்கு ரொக்கப்பரிசு**

திருவண்ணாமலை,:மாவட்ட

அளவிலான நெற்பயிர் சாகுபடி போட்டியில் முதலிடம் பெற்ற விவசாயிக்கு ரொக்கப்பரிசு வழங்கி கலெக்டர் விஜய்பிங்ளே பாராட்டினார்.

நவரை பட்டத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இடையே, மாவட்ட அளவில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு பரிசுத் தொகை வழங்கும் திட்டத்தை வேளாண்துறை அறிவித்திருந்தது.

இப்போட்டியில், மாவட்டம் முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். அதைத்தொடர்ந்து, அறுவடை காலத்தில் வேளாண்துறை அதிகாரிகள் கொண்ட ஆய்வுக்குழுவினர் நடத்திய கள ஆய்வின் மூலம் பரிசுக்குரிய விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டனர். அதன்படி, செங்கம் தாலுகா நயம்பாடி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சிவலிங்கம், ஏடிடி 49 ரக நெல் சாகுபடியில் ஒரு ஹெக்டரில் 9,775 கிலோ நெல் உற்பத்தி செய்து மாவட்ட அளவில் முதலிடத்தை பெற்றுள்ளார். மேலும், முற்றிலும் இயற்கை உரம் பயன்படுத்தியும், திருந்திய நெல் சாகுபடி முறையிலும் அதிக விளைச்சலை பெற்றிருக்கிறார். அதையொட்டி, விவசாயி சிவலிங்கத்துக்கு வேளாண் துறை சார்பில் ரூ.15 ஆயிரத்துக்கான காசோலையை கலெக்டர் விஜய்பிங்ளே வழங்கி பாராட்டினார். அப்போது வேளாண் உதவி இயக்குனர் சந்திரசேகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**காவிரி ஆற்றங்கரையில் தண்ணீர் பற்றாக்குறையால் கருகும் வாழை**

இடைப்பாடி, : பூலாம்பட்டி பகுதியில் காவிரி ஆற்றின் கரையோரம் வாழை மரங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. காவிரி ஆற்றின் நேரடி பாசனம் மூலமும், கிணற்று நீர் பாசனம் மூலமும் சாகுபடி பணிகள் நடந்து வருகிறது. நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழை பழங்கள், இலை, பூ மற்றும் தண்டு உள்ளிட்டவை உள்ளூர் சந்தைகள் மட்டுமின்றி வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.

காவிரி நீர் பாசனத்தில் விளையும் வாழைப்பழங்களை வெளி மாநில வியாபாரிகள் பலரும் போட்டிபோட்டு கொள்முதல் செய்வது வழக்கம். இந்நிலையில் காவிரி ஆற்றில் கடந்த 2 மாதங்களாக தண்ணீர் வரத்து இல்லை. குடிநீருக்கு மட்டுமே ஆற்றில் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால் விவசாய பணிகள் முடங்கியது. சிலர் கிணறு மற்றும் போர்வெல் நீரை நம்பி சாகுபடி பணிகளை துவங்கினர். வாழை மரங்களை நடவு செய்து, பராமரித்து வரும் நிலையில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்தது. இதனால் வாழை மரங்கள் தண்ணீர் இல்லாமல் கருகி வருகின்றன. விவசாயிகள் சிலர் வாழை பயிரை காப்பாற்றுவதற்காக புதிதாக போர் வெல் போடும் பணியிலும், ஏற்கனவே உள்ள கிணற்றை தூர் வாரும் பணியிலும் ஈடுபட்டனார். ஆனால் பூலாம்பட்டி

பகுதியில் 300 அடி ஆழத்துக்கு தோண்டிய போதும் தண்ணீர் இல்லாத நிலையே உள்ளது. இதனால் வாழை பயிர்களை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாததால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு இல்லாத நிலையே உள்ளது. இதனால் மழை பொழிந்தால் மட்டுமே வாழை பயிர்களை காப்பாற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, பருவ மழை துவங்கும் வரை கிணறு தண்ணீரை பயன்படுத்தி சாகுபடி செய்ய திட்டமிட்டோம். ஆனால் கிணற்று நீர் மட்டம் மளமளவென சரிந்துள்ளது. இதனால் பாசனத்துக்கு தற்போது தண்ணீர் இல்லை. வாழை செடிகள் காய்ந்து வருகின்றன. எந்த நோய் தாக்குதலும் இல்லை ஆனால் தண்ணீர் பற்றாக்குறையால் வாழை செடிகள் கருகி வருகின்றன. இந்த முறை வாழை சாகுபடி செய்த விவசாயிகள் பல லட்சம் ரூபாய் இழப்பை சந்தித்துள்ளனர். மழை பெய்தால் மட்டுமே பயிர்களை காப்பாற்ற முடியும் என்றனர்.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்மழை அமராவதி அணை நீர் மட்டம் உயர்வு**

உடுமலை,: நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்மழை பெய்வதால் அமராவதிஅணையின் நீர்மட்டம் மளமளவென உயர்கிறது.

உடுமலை அருகே உள்ள அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனம் பெறுகின்றன.

புதிய ஆய க்கட்டு பகுதிகளுக்கு பிரத £ன கால்வாயிலும், பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு ஆற்று வழியாகவும் மற்றும் கல்லாபுரம், ராம குளம் வாய்க்கால் களிலும் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படுகிறது.

இதுதவிர, நூற்றுக் கணக்கான கிரா மங்களின் குடி நீர் தேவைக்காகவும் ஆற்றில் தண்ணீர் திறக்கப்படுகிறது. கடந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் அமராவதி அணை வற ண்டது. இதனால், விவசாய பணிகள் முற் றிலும் பாதிக்கப்பட்டது. குடிநீர் பிரச்னையும் தலை தூக்கி யது.நேற்று முன்தினம் நிலவரப்படி அமராவதி அணையின் நீர்மட்டம் 32 அடியாக இருந்தது.

இந்நிலையில் கேரளா மற்றும் வால்பாறையில் பெய்த கனமழை கார ணமாக பாம் பாறு, சின்னாற்றின் வழி யாக அம ராவதி அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது.நேற்று முன்தினம் காலை நிலவரப்படி அ¬ ணக்கு வினாடிக்கு 2261 கன அடி தண்ணீர் வந்தது. இதனால் ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 3 அடி அதிகரித்து 35.92 அடியாக உயர்ந்தது. அ¬ தத்தொடர்ந்து அமராவதி அணையில் இருந்து ஆற்றின் வழியாக கொமரலிங்கம், கண்ணாடிப்புத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு வரை உள்ள பழைய ஆயக்கட்டு பாசனமாகிய

5 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு,தென்னை பயிர்களுக்காகநேற்று முன்தினம் காலை அணை யில் இருந்து ஆற்றில் வினாடிக்கு ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில், அணை யின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான கேரள மாநிலம் மறையூர் மற்றும் அதைச்சுற்றியுள்ள தலைய £று,வ £ழவுவாரை எஸ்« டட்,கு ண்டுமலை எஸ்டேட், சட்டமூணாறு ஆகிய பகுதிகளில் தொடர் கனமழை பெய்து வருகிறது. இந்த தண்ணீர் கோவில்கடவு என்ற இடத்தில் ஒன்று சேர்ந்து பாம்பாற்றில் கலந்து அமராவதி அ¬ ணக்கு வருகிறது. 3 ஆண்டுகளுக்குபிறகு இப்போதுதான் கோவில்கடவு பகுதியில் இந்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மூணாறு செல்லும் சுற்றுலா பயணிகள் இந்த அருவியில் தண்ணீர் கொட்டுவதை பார்த்து ரசித்தவாறு செல்கின்றனர்.

இந்த மழை வெள்ளத்தால் அமராவதி அணையின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. இதனால், நேற்று ஒரே நாளில் 7 அடி உயர்ந்து நேற்று நீர்மட்டம் 43.08 அடியானது.நேற்று அ¬ ணக்கு வினாடிக்கு 4170 கன அடி நீர்வரத்து இருந் தது. மழை நீடிக்கும் பட்சத்தில் 90 அடி நீர்மட்டம் கொண்ட அணை விரை வில் நிரம்பி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**நுண்நீர் பாசன விழிப்புணர்வு முகாம் பொங்கலூரில் இன்று நடக்கிறது**

திருப்பூர், : நுண்நீர் பாசனம் குறித்த விழிப்புணர்வு முகாம் பொங்கலூரில் இன்று நடக்கிறது. இதுகுறித்து கலெக்டர் கோவிந்தராஜ் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:
திருப்பூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டு தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய நுண்நீர் பாசன இயக்க திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத் துறைக்கு 1,080 ஹெக்டேரும், வேளாண் துறைக்கு 550 ஹெக்டேரும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக் கிறது.வறட்சியை சமாளிக்கவும், விவசாயிகள் நுண்நீர் பாசனம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், நுண்நீர் பாசனத்துக்கு வழங்கப்படும் மானியங்கள் பற்றிய விவரங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையிலும், மாவட்ட அளவில் நுண்நீர் பாசனம் தொடர்பான விழிப்புணர்வு முகாம் பொங்கலூர் வட்டார விரிவாக்க அலுவலகத்தில் நாளை (புதன் கிழமை) காலை 10 மணிக்கு கலெக்டர் தலைமையில் நடக்க இருக்கிறது.

இதில், வேளாண் விஞ்ஞானிகள், தோட்டக்கலைத் துறையினர், வேளாண் துறையினர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு விளக்கம் அளிக்க உள்ளனர். இந்த முகாமில் விவசாயிகள் தவ றாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நடப்பு பருவத்திற்கு விளைச்சலுக்கு விதை பரிசோதனை அவசியம் அதிகாரி விளக்கம்**

கரூர், : நடப்பு பருவத்திற்கான விதை பரிசோதனை செய்வது அவசியம் என விதை பரிசோதனை நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

கரூர் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் வெங்கட்ராமன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

விதையே விணீளைச்சலுக்கு மிக முக்கியமான இடுபொருள். கரூர் மாவட்ட விவசாயிகள் நடப்பு பருவத்தில் விதைப்பதற்காக தங்கள் கைவசம் வைத்துள்ள நெல், சிறுதானியம், எண்ணை வித்து, பயறுவகை, காய்கறி விதைகளை ஆய்வு செய்து அவற்றின் தரத்தை முன்கூட்டியே தாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

எனவே கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு விதைச்சான்று மற்றும் அங்கக சான்று துறையின் கீழ் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு தங்களிடம் உள்ள விதைக் குவியலில் இருந்து சுமார் 100 கிராம் விதை மாதிரி எடுத்து ஒரு பையில் இட்டு அத்துடன் துண்டு சீட்டில் பயிர், ரகம், குவியல் எண் ஆகிய விவரங்களை எழுதி வைக்க வேண்டும். அத்துடன் தங்களின் தெளிவான அஞ்சல் முகவரியுடன் கூடிய முகப்புக் கடிதத்தையும் வைத்து ஒரு விதை மாதிக்கு ஆய்வுக் கட்டணமாக 30 ரூபாயுடன், வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், 2வதுகுறுக்குத்தெரு, திண்ணப்பா நகர் காந்திகிராமம் கரூர் 4 என்ற முகவரியில் நேரடியாகவோ, அல்லது தபால் மூலமாகவோ ஒப்படைத்து விதை ஆய்வு முடிவுகளை பெற்று பயனடையலாம். இவ்வாறு கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

**3 வாரங்களுக்கு பின் நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ஏலம் மூட்டை ரூ.8 ஆயிரத்திற்கு விற்பனை**

நாமகிரிப்பேட்டை, : நாமகிரிப்பேட்டையில் 3 வாரங்களுக்குபின் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், விரலி ரகம் ரூ.8 ஆயிரத்திற்கு விற்பனையானது.

தமிழகத்தில் ஈரோட்டிற்கு அடுத்து நாமகிரிப்பேட்டையில்தான் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளன. வாரந்தோறும் செவ்வாய்கிழமையன்று நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ஏலம் நடக்கும். கடந்த சில வாரங்களுக்கு முன் மஞ்சள் விலை உயர்ந்து வந்தது. மூட்டை ரூ.10 ஆயிரத்தை தாண்டிய மஞ்சள் சில வாரங்களிலேயே ரூ.12 ஆயிரத்தை தொட்டது. கூட்டுறவு சங்கத்தில் அதிகபட்சமாக குவிண்டால் ரூ.11750 வரையிலும், தனியார் மண்டிகளில் ரூ.12,250 வரையிலும் விற்பனையானது.

இந்நிலையில் தொடந்து மஞ்சள் விலை குறையத் தொடங்கியது. கடந்த மாதம் விரலி ரகம் மூட்டை ரூ.6 ஆயிரமாக குறைந்தது. இதனால் விலை கட்டுப்படியாகவில்லை என்று விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைக்க தொடங்கினர். மேலும், கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து மஞ்சள் வரத்து அதிகரித்ததால் விலை மேலும் குறையத் தொடங்கியது. இதனால், வியாபாரிகள் கடந்த வராததால் நாமகிரிப்பேட்டையில் கூட்டுறவு சங்கம், தனியார் மண்டிகளில் மூன்று வாரங்களாக மஞ்சள் ஏலம் ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில் 3 வாரங்களுக்கு பிறகு நேற்று நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ஏலம் நடந்தது. வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கத்தில் நடந்த ஏலத்தில் 642 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. விரலி ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ.8699க்கும், குறைந்தபட்சம் ரூ.6379க்கும் ஏலம் போனது. அதேபோல் குண்டு ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ.6579க்கும், குறைந்தபட்சம் ரூ.5898க்கும் ஏலம் போனது. பனங்காலி ரகம் அதிகபட்சமாக ரூ.16,000க்கு விலை போனது. விரலி 377 மூட்டைகளும், உருண்டை 215 மூட்டைகளும், பனங்காலி 50 மூட்டைகளும் என மொத்தம் 642 மூட்டை மஞ்சள் ரூ.28 லட்சத்திற்கு விற்பனையானது.

**சத்தியில் 9 டன் கொப்பரை ஏலம்**

சத்தியமங்கலம், : சத்தியமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று தேங்காய் கொப்பரை ஏலம் நடைபெற்றது. இதில் சத்தியமங்கலம் சுற்றுவட்டார பகுதிகளான ராமபைலூர், புதுவடவள்ளி, சிக்கரசம்பாளையம், கெஞ்சனூர், வரதம்பாளையம், பெரியகுளம், தாண்டாம்பாளையம், கே.என்.பாளையம், எரங்காட்டுர், அரியப்பம்பாளையம், செண்பகபுதூர், கொத்தமங்கலம், தாளவாடி மற்றும் கர்நாடக மாநிலம் நொக்கனூர், சாம்ராஜ்நகர் பகுதிகளிலிருந்து 70 க்கும் மேற்பட்ட விவசாயிகள் 170 மூட்டை (9 டன்) தேங்காய் கொப்பரைகளை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். காங்கயம், எடப்பாடி, பழனி, வெள்ளகோவில், கரூர் பகுதியிலிருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்ய வந்திருந்தனர். நேற்று நடைபெற்ற ஏலத்தில் தேங்காய் கொப்பரை அதிகபட்சம் கிலோ ரூ.46.46 க்கும், குறைந்தபட்சம் ரூ.43.16க்கும் ஏலம் போனது. மொத்தம் 9 டன் கொப்பரை ரூ.3,83,530 க்கு விற்பனையானது. ஏலம் முடிந்தவுடன் விவசாயிகளுக்கு உடனடியாக பணப்பட்டுவாடா செய்யப்பட்டது.

**பயிர் காப்பீட்டு திட்டத்தில் 34 பேருக்கு ரூ.4.95 லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டது**

ஈரோடு, : சித்தோடு உழவர் பணி கூட்டுறவு சங்கத்தில் பயிர்க்கடன் பெற்ற விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தேசிய வேளாண்மை பயிர் காப்பீடு திட்டத்தில் மஞ்சள் பயிருக்கு 34 உறுப்பினர்களுக்கு ரூ.4.95 லட்சம் இழப்பீட்டு தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. சங்க தலைவர் முருகேஷ் தலைமை தாங்கினார். இதில், மாநகராட்சி துணை மேயர் கே.சி.பழனிச்சாமி கலந்து கொண்டு இழப்பீட்டு தொகையை உறுப்பினர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சங்கத்தின் உபதலைவர் பொங்கி, நிர்வாக குழு உறுப்பினர்கள், சித்தோடு பேரூராட்சி தலைவர் வரதராஜன், பேரோடு ஊராட்சி தலைவர் பெரியசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

ஊட்டி, : நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கலெக்டர் அர்ச் சனா பட்நா யக் தலைமை வகித்த £ர். தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மணி (பொ) முன்னிலை வகித்தார். கூட்டத்தில் விவசாய சங்கங்கள், தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். விவசாய சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு விவரம் பெற்று குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 26 கோரிக்கைகள் விவாதிக்கப்பட்ட விவரங்கள் அளிக்கப்பட்டன.

மேலும் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் பாலிற்கு வழங்காமல் உள்ள நிலுவை தொகை உடனடியாக வழங்கப்படும். விவசாயிகளுக்கு பால் கறவை கருவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். வேளாண்மை பொறியியல் துறை மூலம் 2013&14ம் ஆண்டிற்கு விவசாய இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தோட்டக்கலை துறை மூலம் ஆரஞ்சு மர நாற்றுக்கள் வழங்கப்படவும், வன விலங்குகள் பொதுமக்களை தாக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர். போதிய உரங்கள் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் தேவைக்கேற்ப இருப்பில் வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்
27.06.2013 A.M

## நடப்பு சந்தை பருவத்தில் இதுவரை கோதுமை கொள்முதல் 33% சரிவு

நடப்பு சந்தை பருவத்தில் (ஏப்ரல்–மார்ச்) இதுவரை மத்திய, மாநில அரசு அமைப்புகளின் கோதுமை கொள்முதல் 33 சதவீதம் சரிவடைந்து 2.51 கோடி டன்னாக குறைந்துள்ளது. முந்தைய 2012–13 பருவத்தின் இதே காலத்தில் கோதுமை கொள்முதல் 3.74 கோடி டன்னாக இருந்தது.

கொள்முதல் பருவம்

கோதுமை கொள்முதல் பருவம் ஏப்ரலில் தொடங்கி மார்ச் வரையிலான ஓராண்டு காலத்திற்கு நீடிக்கிறது என்றாலும் பொதுவாக ஜூன் மாதத்திற்குள் மொத்த கொள்முதலும் நிறைவடைந்து விடுவது வழக்கம். ஆக, நடப்பு பருவத்தில் நிர்ணயித்த இலக்கை விட கோதுமை கொள்முதல் 33 சதவீதம் குறைந்துள்ளது. தானிய கிடங்குகளில் இட நெருக்கடி பூதாகரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில் கொள்முதல் குறைந்துள்ளது பற்றி அதிருப்தி கொள்ள வேண்டிய அவசியமில்லை என இந்திய உணவு கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய உணவு கழகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி நடப்பு பருவத்தில் இதுவரை மண்டிகளுக்கு கோதுமை வரத்து 28 சதவீதம் குறைந்து 2.92 கோடி டன்னாக சரிவடைந்துள்ளது. இது, கடந்த பருவத்தின் இதே காலத்தில் 4.06 கோடி டன்னாக இருந்தது. நடப்பு பருவத்தில் தனியார் வியாபாரிகளிடம் நல்ல விலை கிடைத்ததால் அரசு அமைப்புகளுக்கு விற்பனை செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை என தெரிகிறது.

நடப்பு பருவத்தில் ஒரு குவிண்டால் கோதுமைக்கு ரூ.1,350 குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் தனியார் வியாபாரிகள் ஒரு குவிண்டால் கோதுமைக்கு ரூ.1,500 முதல் ரூ.1,600 வரை விலை கொடுத்துள்ளனர். இதனால் இந்த பருவத்தில் அரசு அமைப்புகளின் கோதுமை கொள்முதல் 2.60 கோடி டன்னை தாண்டுமா என்பதே சந்தேகம்தான் என இந்திய உணவு கழகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கோதுமை விளைச்சல்

மத்திய விவசாய அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2013 ஜூன் மாதத்துடன் நிறைவடையும் வேளாண் பருவத்தில் கோதுமை விளைச்சல் 9.36 கோடி டன்னாக

இருக்கும் என தெரிகிறது. கடந்த 2011–12 பருவத்தில் கோதுமை உற்பத்தி 9.49 கோடி டன்னாக இருந்தது.

**வானிலை மையம் அறிவிப்பு: தமிழ்நாட்டில் சில இடங்களில் நாளை மழை பெய்யும் கோவை, நீலகிரி மாவட்டங்களில் கனமழை பெய்யும்**

தமிழ்நாட்டில் சில இடங்களில் நாளை மழை பெய்யும் என்றும், கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை பெய்யும் என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

பருவமழை தீவிரம்

இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை பெய்துவருகிறது. கேரளா, கர்நாடக மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது.

தென்மேற்கு பருவமழையை பொறுத்தவரை தமிழ்நாட்டில் அதிக மழையை எதிர்பார்க்க முடியாவிட்டாலும் இந்த வருடம் நெல்லை மாவட்டத்தில் மலைப்பகுதியில் மழை பெய்துவருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

அதுபோல கோவை, வால்பாறை பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

இது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டலம் தெரிவித்துள்ளதாவது:–

இன்று மழை பெய்யும்

தமிழ்நாட்டில் வெப்பச்சலனம் காரணமாக இன்று சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை பெய்யும்.

சென்னையில் சில பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை மாலை அல்லது இரவு நேரத்தில் பெய்யும்.

இவ்வாறு வானிலை மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேர மழை அளவு வருமாறு:–

வால்பாறை, சின்னக்கல்லார் தலா 15 செ.மீ., பெரியார் 6 செ.மீ., நடுவட்டம் 4 செ.மீ., பொள்ளாச்சி 3 செ.மீ., அறந்தாங்கி, செங்கோட்டை தலா 2 செ.மீ., அரிமளம், தென்காசி, கொளச்சல், ஊட்டி, குந்தா பாலம் தலா 1 செ.மீ. மழை பெய்துள்ளது.

**கர்நாடக அணைகளில் கூடுதல் தண்ணீர் திறப்பு: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு ஒகேனக்கல் ஐந்தருவியில் தண்ணீர் கொட்டுகிறது**

கர்நாடக அணைகளில் கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. மேலும், வறண்டு பாறைகளாக காணப்பட்ட ஒகேனக்கல் ஐந்தருவியில் தற்போது தண்ணீர் கொட்டுகிறது.

<u>மழை தீவிரம்</u>

தென்மேற்கு பருவமழை காரணமாக கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் உள்ளிட்ட அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இந்த அணைகள் முழு கொள்ளளவை எட்டிப்பிடிக்க இன்னும் 25 சதவீதம் மட்டுமே தண்ணீர் தேவைப்படுகிறது.

இந்த நிலையில் தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துக்கொண்டே வருவதால், பாதுகாப்பை கருதி கடந்த 3 நாட்களுக்கு முன்பு கபினி அணையில் இருந்து 1,000 கனஅடி வீதமும், கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து 2 ஆயிரம் கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் நேற்று முன்தினம் மேட்டூர் அணையை வந்தடைந்தது.

<u>தண்ணீர் திறப்பு அதிகரிப்பு</u>

இந்த நிலையில் அங்கு மழை தீவிரம் அடைந்து உள்ளதால், அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டு உள்ளது. நேற்று மாலை நிலவரப்படி கபினி அணையில் இருந்து வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி வீதமும், கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இந்த தண்ணீர் தமிழக–கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவை கடந்து ஒகேனக்கல் வழியாக மேட்டூர் அணையை நோக்கி சீறிப்பாய்ந்து வருகிறது. இதற்கிடையே, பிலிகுண்டுலுவில் தண்ணீர் வரத்தை காவிரி ஆற்றில் படகில் சென்று மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் கணக்கிட்டு வருகின்றனர்.

<u>ஐந்தருவியில் தண்ணீர் கொட்டுகிறது</u>

நேற்று மாலை ஒகேனக்கல் பகுதிக்கு 1,500 கனஅடி வீதம் வந்த தண்ணீர், படிப்படியாக அதிகரித்து நேற்று காலை வினாடிக்கு 3 ஆயிரம், 4 ஆயிரம் கனஅடி என அதிகரித்து. இது நேற்று மதியம் மேலும் அதிகரித்து வினாடிக்கு 7 ஆயிரம் கனஅடி வீதம் வந்தது.



நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் ஒகேனக்கல்லில் வறண்டு காணப்பட்ட காவிரி ஆற்றில் தற்போது தண்ணீர் நிரம்பி பரந்து விரியத்தொடங்கி உள்ளது. அங்கிருந்த அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. தண்ணீர் வரத்து இல்லாததால் வறண்டு பாறைகளாக காட்சியளித்த ஐந்தருவி பகுதியில் தற்போது தண்ணீர் நுங்கும், நுரையுமாக கொட்டுகிறது. இதைப் பார்த்து சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் என்பதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றங்கரையோரத்திலும், அருவி பகுதியிலும் பாதுகாப்புக்காக போலீசார் நிறுத்தப்பட்டு உள்ளனர்.

மேட்டூர் அணைக்கு...

இதற்கிடையே, காவிரிநீர் பாலாறு, பண்ணவாடியை கடந்து சீறிப்பாய்ந்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு 1,100 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த தண்ணீர், மாலையில் வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.

நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 15.51 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்றைய நிலவரப்படி 15.66 அடியாக உயர்ந்தது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வந்தால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயரும். மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**விளைச்சல் அதிகரிப்பால் சின்ன வெங்காயம் கிலோ ரூ. 60–க்கு விற்பனை மழை பெய்வதால் விலை மேலும் குறைய வாய்ப்பு**

விளைச்சல் அதிகரிப்பால் சின்னவெங்காயம் கிலோ ரூ.60–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தமிழகம் மற்றும் கர்நாடகாவில் மழை பெய்து வருவதால் விலை மேலும் குறைய வாய்ப்பு இருக்கிறது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சின்னவெங்காயம்**

கர்நாடகா மாநிலம் மைசூர், கொள்ளேகால் உள்ளிட்ட பகுதியிலும், சேலம் மாவட்டத்தில் பனமரத்துப்பட்டி, மேச்சேரி, தலைவாசல், மல்லூர், ஓமலூர், வாழப்பாடி, ஜலகண்டாபுரம் உள்ளிட்ட பகுதியிலும், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும் சின்னவெங்காயம் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

சேலம் மார்க்கெட்டுக்கு கர்நாடகா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து டன் கணக்கில் சின்னவெங்காயம் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. கடந்தாண்டு போதிய மழை இல்லாததால் சின்னவெங்காயம் விளைச்சல் வெகுவாக குறைந்தது. இதனால் சேலம் மார்க்கெட்டிற்கு சின்ன வெங்காயத்தின் வரத்து குறைந்ததால் ஒரு கிலோ ரூ.90 வரைக்கும், உழவர் சந்தையில் ரூ. 80 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது.

**விலை குறைந்தது**

இந்தநிலையில், கர்நாடகாவில் பெய்துவரும் மழையால் தற்போது சின்னவெங்காயம் விளைச்சல் அதிகரித்து காணப்படுகிறது. இதனால் அங்கிருந்து டன் கணக்கில் சின்னவெங்காயம் சேலம் மார்க்கெட்டிற்கு வந்து கொண்டிருக்கிறது. கடந்த 2 வாரங்களுக்கு முன்பு வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.80–க்கு விற்பனை செய்யப்பட்ட முதல் ரக சின்னவெங்காயம் தற்போது ரூ.60–க்கும், உழவர் சந்தையில் ரூ. 55–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கர்நாடகாவிலும், தமிழகத்திலும் தற்போது மழை பெய்து வருவதால் சின்னவெங்காயத்தின் விலை மேலும் குறையவாய்ப்பு இருக்கிறது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

### பூதப்பாடி விற்பனைக்கூடத்தில் ரூ.11½ லட்சத்துக்கு பருத்தி விற்பனை

அம்மாபேட்டை அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், நேற்று முதல் பருத்தி ஏலம் தொடங்கியது. சேலம் மாவட்டம், கொங்கணாபுரம், கொளத்தூர், எடைப்பாடி, அந்தியூர், அம்மாபேட்டை மற்றும் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டுவந்திருந்தார்கள்.

மொத்தம் 627 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தன. அனைத்து விவசாயிகளும் பி.டி. காட்டன் ரக பருத்திகளையே கொண்டு வந்திருந்தனர். ஏலத்துக்கு ஈரோடு விற்பனைக்கூட சங்க செயலாளர் முருகானந்தம், பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் அந்தோணி ஜோசப் லூர்துராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பருத்தி குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 4 ஆயிரத்து 400 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 5 ஆயிரத்து 100 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 11 லட்சத்து 67 ஆயிரத்து 316 ரூபாய்க்கு விற்பனையானது. கோவை, அன்னூர், பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரையை சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்துகொண்டு பருத்தி மூட்டைகளை வாங்கி சென்றார்கள்.

## சத்தியமங்கலத்தில் ரூ.30 லட்சத்துக்கு பருத்தி–வாழைப்பழங்கள் விற்பனை

சத்தியமங்கலத்தில் ரூ.30 லட்சத்துக்கு பருத்தி–வாழைப்பழங்கள் விற்பனையானது.

பருத்தி விற்பனை....

சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. சத்தி, பண்ணாரி, ராஜன்நகர், கொத்தமங்கலம், அரியப்பம்பாளையம், அரசூர், கடத்தூர், எழந்தூர், மாக்கினாங்கோம்பை, சிவியார்பாளையம், கொடிவேரி உள்ளிட்ட பகுதியில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை விற்பனை செய்ய கொண்டு வந்திருந்தார்கள். மொத்தம் 1,500 மூட்டை பருத்தி விற்பனை செய்ய கொண்டுவரப்பட்டு இருந்தது. சஞ்சு, பிரம்மா, பி.டி. ரக பருத்திகள் ஒரு குவிண்டால் 4 ஆயிரத்து 900 ரூபாய் முதல் 5 ஆயிரத்து 460 வரை ஏலம் போனது. இந்த விலை கடந்த வார விலையை விட குவிண்டாலுக்கு 200 ரூபாய் அதிகமாகும். மொத்தம் ரூ.25 லட்சத்துக்கு விற்பனையானது.

வாழைப்பழங்கள்

இதேபோல் வாழைப்பழங்கள் ஏலம் நடைபெற்றது. மொத்தம் 3 ஆயிரத்து 500 தார் வாழைப்பழங்கள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டு இருந்தது. கதளி பழம் ஒரு கிலோ 40 ரூபாய் 10 காசுக்கும், நேந்திரம் 35 ரூபாய்க்கும், ஒரு தார் தேன் வாழை 600 ரூபாய்க்கும், செவ்வாழை 700 ரூபாய்க்கும், ரஸ்தாளி 470 ரூபாய்க்கும், மொந்தன் 350 ரூபாய்க்கும், பூவன் பழம் 500 ரூபாய்க்கும், பச்சைநாடன் 290 ரூபாய்க்கும், ரொபஸ்டா 350 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.4½ லட்சத்துக்கு வாழைப்பழங்கள் விற்பனையானது.

## ரூ.27 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. பெருந்துறை மற்றும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் 1,207 மூட்டைகள் 59 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டுவந்திருந்தனர்.

முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ 46 ரூபாய் 75 காசு முதல் 48 ரூபாய் 75 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் 33 ரூபாய் 60 காசு முதல் 46 ரூபாய் 15 காசு வரை ஏலம் போனது. இந்த விலை கடந்த சனிக்கிழமை விலையை விட ஒரு ரூபாய் கூடுதலாகும். மொத்தம் ரூ.27 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனையானது.

**காரமடை அருகே யானைகள் அட்டகாசத்தால் வாழைகள் நாசம்**

காரமடை அருகே தோலம்பாளையம், வெள்ளியங்காடு, கெம்மாரம்பாளையம், காளம்பாளையம், தேக் கம்பட்டி, நெல்லித்துறை உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் பெரும்பாலான கிராமங்களில் நெல், கரும்பு, வாழைகள் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்பட்டு உள்ளன. இந்த பகுதிகளுக்குள் காட்டுயானைகள் அடிக்கடி புகுந்து நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்களை தின்று சேதப்படுத்தி வருகின்றன.

இதனால் விவசாயிகள் பெரும் சிரமத்துக்கும், நஷ்டத்துக்கும் ஆளாகி வருகின்றனர். காரமடை அருகே உள்ள வெள்ளியங்காடு கிராமத்தில் கே.பாலகிருஷ்ணன் என்பவரின் வாழை தோட்டத்துக்குள் இரவு 2 குட்டிகளுடன் 10–க்கும் மேற்பட்ட யானைகள் புகுந்தன.

அவை அங்கிருந்த 1000–க்கும் மேற்பட்ட வாழைகளை தின்று சேதப்படுத்தி விட்டு சென்று விட்டன. இதன் சேத மதிப்பு ரூ.1.50 லட்சம் இருக்கும் என்று கூறப்படுகிறது. வன விலங்குகளால் பயிர்கள் நாசம் அடைவதற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**இந்தியா முழுவதும் சிறு தேயிலை விவசாயிகள் மேம்பாட்டுக்கு மத்திய அரசு ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு தேயிலை வாரிய உதவி தலைவர் பேட்டி**

இந்தியா முழுவதும் சிறு தேயிலை விவசாயிகள் மேம்பாட்டிற்காக ரூ.200 கோடி நிதி ஒதுக்கப்பட்டு உள்ளதாக தேயிலை வாரிய உதவி தலைவர் கோஷிபேபி தெரிவித்து உள்ளார்.

<u>கூட்டம்</u>

அகில இந்திய தேயிலை சிறு விவசாயிகள் கட்டமைப்பு மற்றும் தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகள் சங்கம் ஆகியவை சார்பில் குன்னூரில் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் அகில இந்திய தேயிலை சிறு விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் சமீர்ராய் தேயிலை வாரியத்தின் உதவி தலைவரும், தென்னிந்திய தேயிலை விவசாயிகள் சங்க உதவி தலைவருமான கோஷி பேபி, தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகள் சங்க தலைவர் டாக்டர் ராமு ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானங்கள் குறித்து தேயிலை வாரிய உதவி தலைவர் கோஷிபேபி கூறிய தாவது: மத்திய நிதி மந்திரி ப.சிதம்பரம் சிறு தேயிலை விவசாயிகள் மேம்பாட்டிற் காக ரூ.200 கோடி நிதி ஒதுக்கி உள்ளார். இந்த நிதியில் இருந்து இந்தியா முழுவதும் உள்ள சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் பல்வேறு கருவிகள் வழங்கப்படும்.

<u>சிறு தேயிலை விவசாயிகள்</u>

அகில இந்திய அளவில் 2 லட்சம் சிறு தேயிலை விவசாயிகள் 4 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை சாகுபடி மேற்கொண்டு உள் ளனர். இவர்களுக்கு தேயிலை வாரியத்தின் திட்டங்கள் சென்றடைய முடிவுகள் மேற் கொள்ளப்பட்டு உள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் சிறு தேயிலை விவசாயிகள் சங்கங் களை அமைக்க வேண்டும். இவ்வாறு இந்தியா முழுவதும் 400 சங்கங்கள் அமைக்க வேண்டும் என்று இந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு உள்ளது.

தேயிலை செடி மறுநடவு சிறப்பு திட்டம், தேயிலை கவாத்து சிறப்பு திட்டம் ஆகியவற்றை உடனடியாக செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது. தேயிலை சிறு விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி மற்றும் செயல் முறை விளக்கங்கள் அகில இந்திய அளவில் அனைத்து இடங்களிலும் தீவிரமாக செயல்படுத்த தீர்மானிக்கப் பட்டு உள்ளது.

<u>வளர்ச்சி அதிகாரி</u>

தேயிலை சிறு விவசாயிகள் சங்கம் சார்பில் தேயிலை தொழிற் சாலைகள் அமைக்க உதவி செய்ய முடிவு செய்யப்பட்டு உள்ளது. சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 3 ஆயிரம் ஏக்கருக்கு ஒரு வளர்ச்சி அதிகாரி அமைக்க திட்டமிடப் பட்டு உள்ளது. கடந்த ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளுக்கு பல்வேறு மானிய திட்டங்கள் அறிவிக்கப் பட்டு இருந்தது. பந்தலூர், தேவாலா ஆகிய இடங்களில் இந்த திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட சிறு தேயிலை விவசாயிகள் மனு செய் திருந்தனர்.

<u>விசாரணை கமிஷன்</u>

ஆனால் இந்தமனுக்கள் சரியான முறையில் பரிசீலனை செய்யப்படவில்லை. இதன் காரணமாக 2 கோடி ரூபாய் திருப்பி அனுப்பப்பட்டு உள்ளது. இது குறித்து வால்பாறையில் நடைபெற்ற தேயிலை வாரிய கூட்டத்தில் எடுத்து கூறப்பட்டது. தேயிலை வாரிய தலைவர் பானு இது குறித்து விசாரணை கமிஷன் அமைக்க உத்தரவிட்டு உள்ளார். இந்த விசாரணை கமிஷன் தேயிலை வாரிய துணை தலைவர் தலைமையில் நடைபெறும். 201314 நிதியாண்டில் சிறு விவசாயி களுக்கு ஒதுக்கப் பட்ட நிதி முழுமையாக அமல்படுத்தப் படும். இவ்வாறு அவர் கூறினார்.

**தாராபுரம் தினசரி காய்கறி மார்க்கெட் விவகாரம்: விவசாயிகள்–வியாபாரிகள் இடையே கடும் வாக்குவாதம் நகராட்சி ஆணையாளர் தலைமையில் சமரச பேச்சுவார்த்தை**

தாராபுரம் தினசரி காய்கறி மார்க்கெட்டில் காய்கறி விற்பனை செய்வது தொடர்பாக விவசாயிகள்வியாபாரிகளுக்கு இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து நகராட்சி ஆணையாளர் தலைமையில் சமரச பேச்சுவார்த்தை நடைபெற்றது.

<u>மார்க்கெட்டில் சுகாதார சீர்கேடு</u>

தாராபுரம் சர்ச் ரோட்டில் நகராட்சி தினசரி காய்கறி மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இங்குள்ள கட்டிடத்தில் 40 கடைகளும், தரையில் 40 கடைகளும் உள்ளன. இதில் கட்டத்தின் கீழ் உள்ள கடைகளுக்கு தினசரி வாடகை ரூ.25 எனவும், தரையில் உள்ள கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.15 எனவும் குத்தகைதாரர் வசூல் செய்து வருகிறார்.

இதற்கிடையில் காய்கறி விற்பனைக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள கடைகளில் சிலவற்றை பேக்கரி, கட்டுமான பொருட்கள் விற்பனை செய்யும் கடை மற்றும் இதர பொருட்கள் விற்பனை செய்யும் கடையாகவும், குடோனாகவும் மாற்றி உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் தினசரி மார்க்கெட்டில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

<u>கலெக்டரிடம் புகார்</u>

இந்தநிலையில் விவசாயிகள் தாங்கள் விளைய வைத்த காய்கறிகளை தினசரி மார்க்கெட்டிற்கு கொண்டு வந்து வைத்து விற்பனை செய்ய ஏற்கனவே இடம் ஒதுக்கப்பட்டு இருந்ததாகவும், தற்போது அந்த இடத்தை வியாபாரிகள் ஆக்கிரமித்து விட்டதாக கூறப்பட்டது. இதனால் பஸ் போக்குவரத்து உள்ள சாலையில் வைத்து காய்கறிகளை விவசாயிகள் விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதற்கு உரிய நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை மீண்டும் வழங்க வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜிடம் விவசாயிகள் மனு கொடுத்தனர்.

மேலும் காய்கறிகளை மார்க்கெட்டிற்கு கொண்டு வரும்போது, இடைத்தரகர்கள் ஒரு விலை நிர்ணயித்து வாங்கி சென்று விடுவதாகவும், பின்னர் மார்க்கெட்டிற்குள் சென்று கேட்டால் நிர்ணயித்த விலையை தருவது இல்லை என்றும் விவசாயிகள் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

<u>ஆர்.டி.ஓ.ஆய்வு</u>

இதையடுத்து கலெக்டர் உத்தரவின் பேரில் ஆர்.டி.ஓ. திவாகர், நகராட்சி ஆணையாளர் சரவணக்குமார் ஆகியோர் காய்கறி மார்க்கெட்டிற்கு சென்று ஆய்வு செய்தனர். அப்போது காய்கறி விற்பனை செய்ய செய்ய ஒதுக்கப்பட்டிருந்த கடைகளை வேறு பயன்பாட்டிற்கு

பயன்படுத்தி வருவதும், பொதுமக்கள் நடக்க முடியாத அளவுக்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு நகராட்சி சார்பில் பலமுறை நோட்டீசு கொடுக்கப்பட்டது. அப்போது சில அரசியல் பிரமுகர்கள் வியாபாரிகள் போர்வையில் புகுந்து, அதிகாரிகளிடம் தகராறு செய்ததாக கூறப்படுகிறது. இதற்கிடையில் ஆக்கிரமிப்புகளை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் பொதுமக்களும், ஆக்கிரமிப்புகளை அகற்ற மேலும் அவகாசம் வேண்டும் வியாபாரிகளும் கோரிக்கை வைத்ததால் பிரச்சினை பெரிதானது.

பேச்சுவார்த்தை

இதையடுத்து இரு தரப்பினரையும் அழைத்து சமாதானம் செய்ய நகராட்சியில் நேற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தைக்கு நகராட்சி ஆணையாளர் சரவணக்குமார் தலைமை தாங்கினார். போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவக்குமார் முன்னிலை வகித்தார். இதில் விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அப்போது வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் தங்களது தரப்பு கருத்துக்களை எடுத்து கூறினார்கள். வியாபாரிகள் கூறும்போது 'குடோன்களை பல லட்சம் கொடுத்து வாடகைக்கு எடுத்துள்ளோம். எனவே குடோன்களை மாற்ற முடியாது, விவசாயிகளின் காய்கறிகளை விற்பனை செய்ய உழவர் சந்தை உள்ளதாகவும், அவர்கள் அங்கே செல்லட்டும்' என்றும் கூறினார்கள். விவசாயிகள் தரப்பில் பேசியவர்கள் தங்களது காய்கறிகளை வைத்து விற்பனை செய்ய இடம் ஒதுக்க வேண்டும் என்றனர். இதனால் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதையடுத்து நகராட்சி ஆணையாளர் பேசும்போது, 'நகராட்சி காய்கறி மார்க்கெட் ஏலம் எடுத்தவர்கள் காய்கறி கடைதான் நடத்த வேண்டும். அதில் வேறு கடைகள் நடத்தக்கூடாது. மேலும் நகராட்சி சொத்தை விற்பனை செய்ய யாருக்கும் உரிமை இல்லை. எனவே நகராட்சி விதிகளின் படி கட்டுப்படவில்லை என்றால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு மார்க்கெட் விரைவில் ஒழுங்குபடுத்தப்படும்' என்றார். இதையடுத்து பேச்சுவார்த்தை முடிவடைந்தது.

## திருமயத்தில் தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்கப்படுகிறது கலெக்டர் தகவல்

திருமயத்தில் தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்கப்பட உள்ளது என்று கலெக்டர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் மனோகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித் துள்ளதாவது;

**கொள்முதல் நிலையம்**

புதுக்கோட்டை மாவட் டத்தில் திருமயம் மற்றும் பொன்ன மராவதி தாலுகாக் களில் உள்ள தென்னை சாகுபடி விவசாயிகள் நலன் கருதி திருமயம் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதிதாக தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்கப்பட உள்ளது. அதனால் சங்க எல்லைக்கு உட்பட்ட திருமயம் மற்றும் பொன்னமராவதி தாலுகாக்களில் உள்ள தென்னை சாகுபடி விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் கொப்பரையை அந்த சங்கத்தில் கொள்முதல் செய்திட அடையாள அட்டை பெற வேண்டும். இதற்கான விண்ணப்ப படிவங்கள் தங்கள் பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் வழங்கப்பட உள்ளது.

**விண்ணப்ப படிவங்கள்**

எனவே, விவசாயிகள் விண்ணப்ப படிவங்களை பெற்று, அதனை பூர்த்தி செய்து அந்தந்த கூட்டுறவு சங்கங்களில் மீள ஒப்படைக்க வேண்டும். விவசாயிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் பட்டு கூட்டுறவுத்துறை, வேளாண்மைத்துறை மற்றும் வருவாய்த்துறை அலு வலர்களால் கள ஆய்வு செய்யப் பட்டு, வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள் மூலம் தகுதியுடைய விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளது.

அதைத்தொடர்ந்து, திருமயத்தில் கொப்பரை கொள்முதல் நிலையம் செயல்பட தொடங்கும். அதன் பின்னர் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் கொப்பரைகளை கொள் முதலுக்கு கொண்டு வந்து பயனடையலாம்.

இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் ஆயிரம் பண்ணைக்குட்டைகள் அமைக்க இலக்கு மாவட்ட திட்ட அதிகாரி தகவல்

பெரம்பலூர் மாவட்டத் தில் விவசாய நிலங்க ளில் ஆயிரம் பண்ணைக் குட்டைகள் அமைத்திட திட்டமிடப் பட்டுள்ளதாக ஊரக வளர்ச்சித் துறை அதிகாரி தெரிவித்தார்.

**விவசாய பணிகள்**

பெரம்பலூர் மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் விவசாய நில அபிவிருத்திப் பணிகள், நிலத்தை மேம்படுத்து தல், மரக்கன்றுகள் நடுதல், பருவ காலத்திற்கு ஏற்ப விவ சாயம் மேற்கொள்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் ஒரு பகுதியாக நிலங் கள் தோறும் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி குறித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சரஸ்வதி கணேசன் நிருபர்களிடம் கூறிய தாவது:

**ஆயிரம் பண்ணைக்குட்டைகள்**

பெரம்பலூர் மாவட்டத்தில் கிராமப்பகுதிகளில் எஸ்.சி. எஸ்.டி. வகுப்பை சேர்ந்த 2 முதல் 5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள சிறு,குறு விவசா யிகளின் நிலங்களில் ஆயிரம் பண்ணைக்குட்டைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் 121 ஊராட் சிகளிலும் ஒரு ஊராட்சிக்கு தலா 10 பண்ணைக்குட்டைகள் அமைக்கும் நோக்கத்துடன் 830 பண்ணைக் குட்டை களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 100க்கும் மேற்பட்ட இடங்க ளில் பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது,

**மழை நீரை சேமிக்கலாம்**

பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணியில் 100 சதவீதம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களே ( நாள் ஒன்றுக்கு ரூ.148 கூலி யுடன்) ஈடுபடுத்தப்படுவார் கள். இந்த திட்டத்தில் கட்டு மான பொருட்கள் பயன் படுத்தஅனுமதி இல்லை. தனிநபர் பயனாளிகள் அதிக பட்சமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் பயன் அடை வார்கள்.

பெரம்பலூர் மாவட்டத்தில் மழை குறைவாக இருப்பதால், பெய்யும் மழைநீரை சேமிக் கவும், நிலத்தடி நீர்மட்டம் உயரவும், கால்நடைகள் நீர் அருந்தவும் விவசாயப் பணிக ளுக்கும் இந்த பண்ணைக் குட்டைகள் பெரிதும் பய னுள்ள வகையில் இருக்கும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரகப்பகுதிகளில் வசிக்கும் தகுதி உள்ள விவசாயிகள் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலரை (கிராம ஊராட்சி) அணுகி தங்களது நிலத்தில் பண்ணைக்குட்டை அமைத்து பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பண்ணைக்குட்டைகள் ஆய்வு**

சிறுவாச்சூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, களரம் பட்டி, புதுநடுவலூர், அன்ன மங்கலம், நெய்க்குப்பை, நூத்தப்பூர், உடும்பியம், எறை யூர், அத்தியூர் வசிஷ்டபுரம், மாவிலங்கை, அயனாபுரம், கொளக்காநத்தம், கொளப் பாடி, உள்ளிட்ட பகுதிகளில் பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணி தீவிரமாக நடந்துவருகிறது.

இந்த கிராமங்களில் நடை பெற்றுவரும் பண்ணைக் குட்டை அமைக்கும் பணியை ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சரஸ்வதி கணேசன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## மதுரை மார்க்கெட்டில் உணவுப்பொருள்களின் விலை தொடர்ந்து உயர்வு; பச்சைப்பட்டாணி ரூ.8 ஆயிரத்தை தொட்டது

மதுரை மார்க்கெட்டில் உணவுப்பொருள்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

விலை உயர்வு

மதுரை மார்க்கெட்டில் உளுந்து, சுண்டல் மற்றும் பட்டாணி ஆகிய உணவுப்பொருள்களின் விலை உயர்ந்துள்ளது. அதன்படி, பட்டாணிப்பருப்பு மூடை ரூ.3,400க்கு விற்ற ஆஸ்திரேலியா ரகம் நேற்று ரூ.3,600க்கும், ரூ.3,050க்கு விற்ற கனடா ரகம் ரூ.3,200க்கும் விற்பனையானது.

ரூ.6 ஆயிரத்துக்கு விற்ற உளுந்தம்பருப்பு முதல் ரகம் ரூ.6 ஆயிரத்து 200க்கும், ரூ.5,500க்கு விற்ற நாடு மற்றும் சாதா ரகம் ரூ.5,800க்கும், ரூ.5,200க்கு விற்ற பொடி ரகம் ரூ.5,400க்கும் விற்பனையானது. ரூ.4,700க்கு விற்ற உளுந்தம் பயறு சூப்பர் ரகம் ரூ.5,200க்கு விற்பனையானது.

வெள்ளை சுண்டல் மூட்டைக்கு ரூ.200 விலை உயர்ந்து பெரிய சுண்டல் ரூ.5,600க்கும், சாதா ரகம் ரூ.5,400க்கும், பி–கிரேடு சுண்டல் ரூ.4 ஆயிரத்துக்கும் விற்பனையானது. ரூ.7,800க்கு விற்பனையான பச்சைப்பட்டாணி ரூ.8 ஆயிரமாக விலை உயர்ந்தது.

இந்தூர் பாலிஷ் ரக கடலை பருப்பு மூட்டை ரூ.4,750க்கும், கர்நாடகா பருப்பு ரூ.4,400க்கும் விற்பனையானது. துவரம்பருப்பு சிவப்பு ரகம் ரூ.6,700க்கும், வெள்ளை ரகம் ரூ.6,800க்கும் விற்றது. சேலம் ரக துவரம் பருப்பு ரூ.6,500க்கு விற்றது.

பாசிப்பருப்பு மூடை ரூ.7,400க்கும், பாசிப்பயறு ரூ.6,400க்கும் விற்பனையாகி வருவதாக மதுரை தரகனார்கள் சங்கத்தலைவர் ஜவகர் தெரிவித்தார்.

சில்லறை விலை

சில்லறை விலையில், ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.80க்கும், கடலைப் பருப்பு ரூ.55க்கும், உளுந்தம் பருப்பு ரூ.70க்கும், உளுந்தம்பயறு ரூ.55க்கும், பாசிப்பருப்பு ரூ.80க்கும், பாசிப்பயறு ரூ.70க்கும், வெள்ளை சுண்டல் சிறியது ரூ.65க்கும், பெரிய சுண்டல் ரூ.80க்கும், தட்டைப்பயறு சீனா ரகம் ரூ.75க்கும், நாடு சாதாரகம் ரூ.65க்கும் விற்பனையாகி வருகிறது. புளி சாதா ரகம் ரூ.70க்கும், தும்கூர் ரகம் ரூ.110க்கும் விற்பனையாகி வருகிறது.

சமையல் எண்ணை

சமையல் எண்ணையை பொறுத்தமட்டில், சில்லறை விலையில், ஒரு கிலோ நல்ல எண்ணை ரூ.148க்கும், அக்மார்க் நல்ல எண்ணை ரூ.148க்கும், தும்பை நல்ல எண்ணை ரூ.198க்கும், கடலை எண்ணை ரூ.128க்கும், கடலை எண்ணை ரீபைண்டு ரூ.148க்கும், தேங்காய் எண்ணை சாதா ரகம் மற்றும் கொழும்பு தேங்காய் எண்ணை ரூ.108க்கும், வனஸ்பதி ரூ.73க்கும், நெய் ரூ.390க்கும் விற்பனையாகிறது.

சூரியகாந்தி எண்ணை ரூ.95க்கும், பாமாயில் ரூ.60க்கும் விற்பனையாகிறது. ரைஸ் பிரான் எண்ணை ரூ.80க்கு விற்பனையாகி வருவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**மழை பெய்தும் நிரம்பாத பச்சையாறு அணை விவசாயிகள் கவலை**

மழை தீவிரமடைந்துள்ள நிலையில் களக்காடு பச்சையாறு அணைக்கு தண்ணீர் வராததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**பச்சையாறு அணை**

களக்காடு அருகே மஞ்சுவிளைக்கு மேற்கே பச்சையாறு அணை உள்ளது. இந்த அணை 50 அடி கொள்ளளவு கொண்டது. களக்காடு, நாங்குநேரி பகுதிகளில் உள்ள 100–க்கும் மேற்பட்ட குளங்கள் பாசனவசதி பெற்று வருகிறது. கடந்த சில மாதங்களாக வறட்சி நிலவியதால் ஆறு மற்றும் குளங்கள் வறண்டன. பச்சையாறு அணையும் தண்ணீர் இன்றி வற்றியது.

இந்த நிலையில் கடந்த 2 வாரங்களாக சாரல் மழை பெய்து வருகிறது. களக்காடு மேற்கு தொடர்ச்சி மலையிலும் சாரல் மழை தீவிரமடைந்து வருகிறது. இதனால் ஆறு, கால்வாய்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. சாரல் மழையால் மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள அணைகள் நிரம்பி வருகின்றன. குண்டாறு அணை நிரம்பியுள்ளது. பாபநாசம் அணையில் 109 அடியை தாண்டி உள்ளது.

**நிரம்பவில்லை**

ஆனால் களக்காடு பச்சையாறு அணையில் 4 அடிக்கு மட்டுமே தண்ணீர் தேங்கி உள்ளது. அணை வறண்டு காட்சி அளிக்கிறது. களக்காடு பச்சையாறு அணைக்கு, தலையணை அருகே உள்ள கோழிக்கால் அருவியில் இருந்து, ஊட்டுக்கால்வாய் மூலம் தண்ணீர் திறந்து விட வேண்டும். ஊட்டு கால்வாய் மூலம் தண்ணீர் திறந்து விடப்படாததால் அணைக்கு தண்ணீர் வரத்து இல்லை என விவசாயிகள் கூறுகின்றனர்.

இதுபற்றி களக்காடு ஒன்றிய பா.ஜ.க. தலைவர் சேர்மன்துரை கூறுகையில், அணைக்கு தண்ணீர் திறந்து விட்டு, அணை நிரம்பிய பின்னர் தான் கால்வாய்களை திறக்க வேண்டும். மாறாக களக்காட்டில் அணைக்கு தண்ணீர் திறக்காமல் கால்வாய்களில் திறந்து விட்டுள்ளனர். இதனால் அணையில் தண்ணீர் தேங்கவில்லை.

எனவே பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, அணைக்கு தண்ணீர் திறந்து விட ஏற்பாடு செய்ய வேண்டும். கால்வாய்களில் திறக்கப்படும் தண்ணீரில் பாதியளவு தண்ணீராவது அணைக்கு திறக்க வேண்டும். அணை நிரம்பவில்லை என்றால் விவசாயத்திற்கு தண்ணீர் தேவைப்படும் போது தண்ணீர் இல்லாத நிலை ஏற்படும் என்று கூறினார்.